பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 20 சனிக்கிழமை 05.09.2020 கதிர் 300

## இனி இது ரகசியம் அல்ல!

தெற்கு அரசியலில் இப்போது அதிகம் பேசப்படும் விடயம் அரசமைப்புக்கான இருபதாவது திருத்தம்.

அதை எப்படியாவது தடுத்து விட வேண்டும் என்பதில் எதிரணியினர், சிவில் சமூகப் பிரதிநிதிகள் போன்றோர் முழு பக்கம்02

# 20ஆவது திருத்தம் மரணப் பொறியே!

## – ஐ.தே.க. தலைவர் ரணில் எச்சரிக்கை



**தனிநபருக்கு நிறைவேற்று அதிகாரம் தடையின்றி முழுமையாகக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயகத்தின் மரணப் பொறியாகவே அமைகின்றது.**

**– இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க.** பக்கம் 02

## ‘20’ குறித்து சு.கவுக்குள் அதிருப்தி!

கொழும்பு, செப்.05

வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் இரட்டை குடியுரிமை பக்கம் 02

## மதில் விழுந்து சிறுவன் சாவு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நேற்று மாலை மதில் விழுந்ததில் 2 வயது சிறுவன் உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த சிறுவன் முள்ளிப் பக்கம் 02

## ஹெரோயினுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், செப்.05

கொக்குவில் பகுதியில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டு வந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் பக்கம் 02

## வல்வையை சேர்ந்தவர் படகு விபத்தில் மரணம்

றொறன்ரோ, செப் 05

றொறன்ரோ – வூட்பைன் கடற்கரைப் பகுதியில் இடம்பெற்ற படகு விபத்தில், உயிரிழந்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது. வல்வெட்டித்துறை தீருவிலைச் சேர்ந்த 46 வயதான இலங்கைகோன் பல்லவநம்பி என்பவரே உயிரிழந்தவர் என்று அடையாளங் காணப்பட்டுள்ளார்.

இவர் 3 பிள்ளைகளின் தந்தையாவார். படகில் இருந்த 7 பேருமே பக்கம் 02

## ரணில், ஹக்கீமிடம் நேற்று ஆணைக்குழுக்கள் துருவல்



அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் சுமார் 5 மணித்தியாலங்களாக வாக்குமூலமளித்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்து பக்கம் 02

## ‘எம்.டி. நியூ டயமண்ட்’ கப்பலின் தீப் பரவல் நேற்றிரவு கட்டுக்குள்

### – இந்தியக் கடலோர காவல்படை தகவல்



‘எம்.டி. நியூ டயமண்ட்’ என்ற எண்ணெய்க் கப்பலில் ஏற்பட்ட தீப் பரவல் நேற்றிரவு கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டுள்ளது என இந்தியா கடலோர காவல்படை பிரிவு தமது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

அம்பாறை, சங்கமன்கண்டி இறங்குதுறையில் இருந்து 40 கடல் மைல்களுக்கு அப்பால் உள்ள பக்கம் 02

## இலங்கை வரும் ஐஸ்வர்யா ராய்!

கொழும்பு, செப் 05

பிரபல இயக்குநர் மணிரத்னத்தின் ‘பொன்னியின் செல்வன்’ படத்தில் 70 வீதமான காட்சிகள் இலங்கையில் படமாக்கப் படவுள்ளன.

அந்தப் படத்தில் 30 வீதமான பணிகள் ஏற்கனவே நிறைவு பெற்றுள்ள நிலையில் எஞ்சிய 70 வீதம் ரன்மினிதன்ன சினிமா கிராமம், தம்புள்ளை உட்பட மேலும் சில பக்கம் 02

### தேசியப் பட்டியல் விவகாரம்

## நீதிமன்று செல்கிறது எங்கள் மக்கள் சக்தி

எங்கள் மக்கள் சக்தி கட்சியின் தேசியப் பட்டியல் விவகாரத்தில் ஐவருக்கு எதிராக உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவர் சமன் பெரேரா தெரிவித்தார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், சட்டமா அதிபர், அத்துரலியே ரத்ன தேரர் மற்றும் வேதிரிகம விமலதிஸ்ஸ தேரருக்கு எதிராகவே அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் பக்கம் 02

## ராஜபக்ஷக்களை ஆதரித்த தேரர் கோட்டா அரசை விமர்சிக்கிறார்

### அபயராமய விகாராதிபதி புதிய நிலைப்பாடு



ரணில் – மைத்திரி அரசாங்கம் மக்களைப் பிரதிபலிக்காமல் செயற்பட்டதால் அதனை நிராகரித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை நியமித்திருக்கின்ற நிலையில், இந்த அரசாங்கமும் நல்லாட்சி செய்த தவறுகளையே பக்கம் 02



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூச்சாக நிற்கின்ற போதிலும் அதற்கு சாத்தியங்கள் ரொம்பவும் குறைவு என்பது போலவே தோன்றுகின்றது.

ஆளும் பொதுஜன பெரமுன தரப்பின் இந்த முயற்சியை எதிரணிகள் இரண்டு வழிமுறைகளில் தடுக்கலாம்.

ஒன்று – நீதிமன்றம் மூலம். மற்றது – நாடாளுமன்றம் மூலம்.

மேற்படி இருபதாவது அரசமைப்புத் திருத்தம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு வாரத்துக்குள் யாரேனும் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம்.

இந்த அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்ற முடியாது என்றோ அல்லது அரசமைப்பின் பிரதான சரத்துக்களை இது மாற்றீடு செய்வதால், சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அதற்கு மக்களின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றோ உத்தரவிடுமாறு கோரி மனுச் செய்ய முடியும்.

அப்படி மனுச் செய்து வாதிட்டாலும் கூட, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிடுவதற்கு வாய்ப்புகள் மிக மிகக் குறைவு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இப்போதைய 20ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் உள்ள விடயங்கள் பெரும்பாலும் ஏற்கனவே அரசமைப்பின் 18ஆம் திருத்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்டவைதான். அவற்றை 19ஆம் திருத்தம் மூலம் அகற்றினார். இப்போது இருபதாம் திருத்தம் மூலம் மீளக் கொண்டு வருகின்றனர். அவ்வளவே.

அதிலும் கூட 18ஆம் திருத்தத்தில் இருந்த அல்லது 19ஆவது திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்ட சர்ச்சைக்குரிய சில பிரதான விடயங்களில் இருபதாவது திருத்தம் கைவைக்கவேயில்லை.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாக 19ஆவது திருத்தம் குறைத்தது. ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் மக்களினால் நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட முடியாது என்ற கட்டுப்பாட்டையும் 19ஆவது திருத்தம் கொண்டு வந்தது.

ஆனால் சர்ச்சைக்குரிய இந்த சரத்துக்களில் இருபதாவது திருத்தம் கைவைக்கவில்லை. இருபதாவது திருத்தத்தில் வரும் ஏனைய விடயங்கள் 18ஆவது திருத்தம் மூலம் அறிமுகப்படுத் தப்பட்டு, 19ஆவது மூலம் நீக்கப்பட்டவை.

அந்த ஏற்பாடுகள் 18ஆவது திருத்தம் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட போது உயர்நீதிமன்றம் அவற்றுக்கு அனுமதியளித்திருந்தது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அவற்றை நிறைவேற்றுவதற்கு நீதிமன்றம் சம்மதம் தெரிவித்திருந்தது. ஆகவே, மீண்டும் அவை வரும் போது அவற்றை மறுப்பதற்கோ, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்கள் அனுமதி பெறப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிடவோமுகாந்திரமில்லை.

எனினும், சஜித்தின் மக்கள் சக்தி இயக்கம், தமிழ்க் கூட்டமைப்பு போன்றவை நீதிமன்றக் களத்தில் இறங்கக் கூடும். ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அரசமைப்புச் சட்ட விற்பன்னர் என்ற முறையில் இக்கட்சிகளும், சிவில் சமூகப் பிரதிநிதிகளும் அவரை நீதிமன்றக் களத்தில் இறக்கி, இந்த அரசமைப்புத் திருத்தம் வரவிடாமல் முட்டுக்கட்டை போடுவதற்கு முயற்சிக்கக் கூடும். ஆனால் அதற்கு சாத்தியம் – வாய்ப்பு – இருப்பதாக நான் நம்பவில்லை.

அடுத்த விடயம் – நாடாளுமன்றம் மூலம் தடுக்க முயற்சிக்கலாம்.

ஆளும் பொதுஜன பெரமுனவுக்கு 145 எம்.பிக்களின் பலம் நாடாளுமன்றத்தில் உள்ளது. தவிரவும், ஈ.பி.டி.பியின் இரண்டு எம்.பிக்கள், சு.க. தரப்பின் அங்கஜன் இராமநாதன், அதாவுல்லா, சிவநேசதுரை சந்திராகாந்தன் (பிள்ளையான்) ஆகியோரின் ஆதரவுடன் 150 எம்.பிக்கள்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு என்பது 150 எம்.பிக்கள்தான். ஆனாலும் பொதுஜன பெரமுன தரப்பில் உள்ள 150 எம்.பிக்களில் ஒருவர் சபாநாயகராகி விட்டார். ஆகவே ஆளும் தரப்பில் இப்போது எம்.பிக்களின் எண்ணிக்கை 149 தான்.

மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவை எட்டுவதாயின் இன்னும் ஓர் எம்.பியை எதிரணித் தரப்பில் இருந்து அரசு கழற்றியாக வேண்டும்.

எம்.பிக்களை அணி சாய்த்துத் திரட்டும் பணியில் சாதனை நிலை நாட்டும் தகுதியுடைய பஸில் ராஜபக்ஷ பெரமுன தரப்பில் இருக்கின்றார்.

நலிவுற்றுக் கிடக்கும் எதிரணியில் இருந்து எம்.பிக்களை கழற்றி எடுப்பது அவருக்கு ஒன்றும் கஷ்டமான விடயமே இல்லை.

ஆளும் தரப்புக்கு தேவையான எம்.பிக்களின் எண்ணிக்கை மட்டுமட்டாக இருந்தாலும் வாக்களிப்பு சமயத்தில் தேவையான ஆதரவை அவர்கள் திரட்டிவிடுவர் என்பது திண்ணம்.

ஆக இருபதாவது திருத்தத்துக்கு எதிராக நீதிமன்றம் மூலமோ, நாடாளுமன்றத்திலோ தடுக்குப்போடுவது சாத்திய மற்றது. மக்களைத் திரட்டிப் போராட்டம் நடத்தி, ஆளும் தரப்பை அசர வைக்கும் பலமும் எதிரணியிடம் இன்று இல்லை. இந்தப் பின்புலத்தில் இருபதாவது திருத்தம் நிறைவேறுவது – சட்டமாவது – தடுக்க முடியாத நிச்சயம் என்று நம்பலாம்.

–மின்னல்–

## ராஜபக்ஷக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துவருவதாக பிரபல பௌத்த பிக்குமார் ஒன்றியம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

கோட்டா – மஹிந்த தலைமையிலான அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வருவதற்காக உதவிய அபயராமய விகாரையின் விகாராதிபதியும், மதகுருமார்களின் குரல் ஒன்றியத்தின் இணைப்பாளருமான முருந்தெட்டுவே ஆனந்த தேரர் இவ்வாறு புதிய அசாங்கம் மீது கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய அரச தலைவரான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக அவர்கள் எதிர்கட்சியாக இருந்த போது தினமும் ஊடக சந்திப்புக்களை நடத்துவதற்காக முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தனது அபயராமய விகாரையை திறந்துகொடுத்து பல்வேறு ஆதரவுகளை செய்துவந்தார்.

இந்த வகையில் கொழும்பு அபயராமய விகாரையில் நேற்று முன்தினம் தினம் விசேட ஊடகவியலாளர் சந்திப்பை நடத்திய முருந்தெட்டுவே ஆனந்த தேரர், கோட்டாபய அரசாங்கத்தின் போக்குக் குறித்துக் கடுமையாக எச்சரித்து கருத்து வெளியிட்டார்.

மக்களின் ஆணை இன்று மாற்றமடையலாம். தினமும் ஒரேமாதிரியாக இருக்காது. ஆகவே மக்களின் இதயத்துடிப்பினை புரிந்துகொள்ளுங்கள். அவர்களுடைய சத்தத்தைக் கேளுங்கள். இல்லாவிட்டால் இந்த அரசாங்கத்திற்கும் நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஏற்பட்டதைப் போலவே ஏற்படும் என்பதில் ஐயமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மதில் விழுந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொத்தானை, யூனிட் – 08 பகுதியைச் சேர்ந்த நசீர் முஸ்ரிப் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உடைந்திருந்த மதிலுக்கு அருகில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்த போது மதில் விழுந்ததில் சிறுவன் உயிரிழுந்தான் என ஆரம்பக் கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த சிறுவனின் சடலம் கந்தளாய் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பில் விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஹெரோயினுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 13 கையடக்கத் தொலைபேசிகள், தராசு, 1,530 மில்லி கிராம் ஹெரோயின் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

கொக்குவில் கிழக்குப் பகுதியில் ஹெரோயின் வியாபாரம் இடம்பெற்று வருவதாக விசேட அதிரடிப் படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. அவ்வாறு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப் படையில் கொக்குவிலில் பகுதியில் மேற் கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போது வீதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் அடிப்படையில் அவருடைய வீட்டில் இருந்து 13 கையடக்கத் தொலைபேசிகளும், தராசு ஒன்றும், 1530 மில்லிக்கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் மீட்கப்பட்ட பொருள்களையும் விசேட அதிரடிப்படையினர் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபரையும் பொருள்களையும் பொறுப்பேற்றுக்கொண்ட கோப்பாய் பொலிஸார் சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

## நீதிமன்று செல்கிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளது.

பொதுபல சேனா காரியாலயத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு கிடைக்கப் பெற்ற ஒரு தேசிய பட்டியல் ஆசனம் யாருக்கு வழங்கப்பட வேண்டும் என கட்சியின் செயற்குழு எடுத்த தீர்மானத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உத்தியோகப்பூர்வமாக அறிவித்தோம்.

ஆனால் எமது தீர்மானத்தை பொருட்படுத்தாமல் தேர்தல்கள் ஆணைக்குழு தேசிய பெயர் பட்டியலை வர்த்தமானியில் வெளியிட்டுள்ளமை தவறான செயற்பாடாக கருதவேண்டும்.

இந்தச் சம்பவத்துக்கு நியாயம் பெற்றுக் கொள்ளும் விதமாகவே உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல்செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

## ரணில், ஹக்கீமிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறியுள்ளார்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன்னிலையில் வாக்குமூலமளிப்பதற்காக நேற்று முற்பகல் ரணில் விக்ரமசிங்க முன்னிலையாகியிருந்தார்.

இதேவேளை, நேற்று முற்பகல் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகியிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், 6 மணித்தியாலங்களாக வாக்குமூலம் வழங்கிவிட்டு அங்கிருந்து வெளியேறியுள்ளார். (முன்னர் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்...)

## ‘20’ குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்படுவது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகும் வாய்ப்பை உலகில் பல நாடுகள் தடுத்துள்ளன.

இதனால், புதிய திருத்தச் சட்டத்தின் மூலம் இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகும் வாய்ப்பு வழங்கப்படுவதை ஏற்க முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாச தெரிவித்துள்ளார் என சிங்கள இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து சுதந்திரக்கட்சியின் அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ‘20’ தொடர்பில் ஆராய்வதற்காக சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு விரைவில் கூடவுள்ளது.

## 20ஆவது திருத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: – அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் தனிநபருக்குரிய அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கும் மக்களுக்குமாகப் பகிர்ந்தளித்தது.

2015ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியைப் போன்று தனிநபருக்கு அதிகூடிய அதிகாரம் எனும் போது அதற்கு மக்கள் ஆணை கிடையாது. ஜனாதிபதிக்குரிய அதிகார முறைமையை முழுமையாகக் கட்டுப்படுத்தவோ அல்லது மாற்றியமைக்கவே 2015 ஆம் ஆண்டில் முயற்சித்தோம். ஆனால், அதற்குச் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என உயர்நீதிமன்றம் விதித்த தடையால் முடியாமல் போனது.

இந்த அரசால் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள முடியாது. மறுபுறம் அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மாற்றியமைத்துள்ள நிலையில் அதன் தாக்கத்தை நிச்சயம் இந்த அரசு எதிர்கொள்ள நேரிடும்.

நாடோ, மக்களோ முன்னோக்கிச் செல்ல வேண்டுமே தவிர பின்னோக்கிச் செல்ல முடியாது – என்றார்.

## ‘எம்.டி.நியூ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்பிராந்தியத்தில் இந்தியா நோக்கிச் சென்ற பனாமா நாட்டுக்குச் சொந்தமான எம்.டி. நியூ டயமண்ட் என்ற எண்ணெய்க் கப்பலில் நேற்றுமுன்தினம் காலை தீப் பரவல் ஏற்பட்டது.

இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கைத் துறைமுக ஆணையம், இந்தியக் கடற்படை மற்றும் இந்தியக் கடலோரக் காவல் படை ஆகியவை இணைந்து மேற்கொண்ட பாரிய தீயணைப்பு முயற்சிகளுக்குப் பின்னர் நேற்றிரவு எம்.டி. நியூ டயமண்ட் கப்பலில் ஏற்பட்ட தீப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தீயை முழுமையாகக் கட்டுப்படுத்த சுமார் 10 நாட்கள் ஆகக் கூடும் என இலங்கை விமானப்படைப் பணிப்பாளர் (கட்டுப்பாட்டு பிரிவு) வைஸ் மார்ல் பி.டி. கே.டி.ஜயசிங்க நேற்றுக் காலை தெரிவித்திருந்த நிலையில் தீ கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என இந்தியா கடலோரக் காவல் படை பிரிவு நேற்றிரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கப்பலில் இருந்த மாலுமி உட்பட 22 பேர் இலங்கைக் கடற்படையால் மீட்கப்பட்டுள்ளனர். பணியாளர் ஒருவர் காணாமல்போயிருந்த நிலையில் அவர் உயிரிழந்துவிட்டார் என்று நேற்றுக் காலை தெரியவந்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, தீக்காயங்களுடன் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட மாலுமி கல்முனை ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார். ஏனைய 21 பணியாளர்களும் உரிய சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி பாதுகாப்பாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது. (விரிவான செய்தி 08ஆம் பக்கத்தில்...)

## இலங்கை வரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் ஒளிப்பதிவு செய்யப்படவுள்ளன என தெரியவருகின்றது என்று சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக நடிகை ஐஸ்வர்யா ராய் உள்ளிட்ட நடிகர்கள் இலங்கை வரவுள்ளனர் எனவும் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் மாதம் முதல் படப்பிடிப்பு ஆரம்பமாகும். 30 வீதமான காட்சிகள் தாய்லாந்தில் எடுக்கப்பட்டுள்ளன.

## வல்வையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் என தெரிவிக்கப்படுகிறது. படகு விபத்துக்கு காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க பொலிஸார் இன்னும் முயன்று வருகின்றனர்.

காயமடைந்தவர்களில் மூவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய மூவரும் சிறிய காயங்களுடன் அந்த இடத்திலேயே சிகிச்சைக்குப் பின்னர் திரும்பியுள்ளனர்.

அதேவேளை, பாறையுடன் படகு மோதிய இந்த விபத்து தொடர்பான வீடியோ அல்லது படங்கள் இருந்தால் அதனை தருமாறுகனேடியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அங்கஜன் தலைமையில் யாழ். மாவட்ட முதலீட்டு ஊக்குவிப்பு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 05

யாழ்ப்பாணம் மாவட்ட முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன், மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், தொழில் துறைசார் திணைக்களங்களின் தலைவர்கள், யாழ். மாவட்ட வணிகர் கழகத்தினர், தொழில் முயற்சியாளர்கள் எனப் பலரும் கலதுகொண்டனர்.



## திருகோணமலைக் கடற் பரப்பினுள் கடல் நீருடன் கலக்கும் எரிபொருள்

திருகோணமலை துறைமுகத்தை அண்மித்த பகுதியில் தரையிறக்கப்படும் எரிபொருள் கடல் நீருடன் அதிகளவில் கலப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கப்பல் மற்றும் துறைமுக வசதிகள் பாதுகாப்பு அமைப்பு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இதனால் அனுமதிக்கப்பட்ட வழிமுறைகளையும் உபகரணங்களையும் பயன்படுத்துமாறு திருகோணமலை துறைமுகத்தில் எரிபொருள் தரையிறக்கும் இந்திய நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

திருகோணமலை துறைமுகம் உலகில் இருக்கும் மிகப்பெரிய இயற்கை துறைமுகங்களில் ஒன்றாகும்.

இலங்கையில் எரிபொருள் விநியோகிக்கும் செயற்பாடுகளில் திருகோணமலை துறைமுகத்தை மையமாகக் கொண்டு பல நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

அதன் பிரகாரம், மாதாந்தம் நான்கைந்து பெரிய கப்பல்கள் திருகோணமலை துறைமுகத்திற்கு வருகின்றமையுடன் அவற்றில் ஒரு தடவைக்கு 20 ஆயிரம் தொன் எரிபொருள் கொண்டு வரப்படுகின்றது.

## கல்வியியற் கல்லூரிகளுக்கு பயிலுநர்களை இணைப்பது பற்றிய அறிவிப்பு வெளியானது

யாழ்ப்பாணம், செப். 05

2020 ஆம் கல்வி ஆண்டுக்காக 2018 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுக்கு அமைய தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு பயிலுநர்களை சேர்த்துக் கொள்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியாகியுள்ளது.

www.moe.gov.lk என்ற இணைய தளத்தின் ஊடாக எதிர்வரும் 25 ஆம் திகதிக்குள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

www.moe.gov.lk ஊடாக விண்ணப்பித்தல் குறித்த மேலதிக தகவல்கள் மற் றும் ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக 0112 787303 அல்லது 0112 787385 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நாடு பூராகவும் உள்ள 19 தேசிய கல்வியியல் கல்லூரிகளில் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் இடம்பெறும் 50 பாடநெறிகளுக்காக 4 ஆயிரத்து 253 பயிலுனர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொலன்னாவ எரிபொருள் தாங்கிகள் புனரமைப்பு!

கொலன்னாவ எரிபொருள் களஞ்சியப்படுத்தல் தாங்கிகள் மூன்றை மீளப்புனரமைப்புச் செய்வதற்கும் அதன் செயற்பாட்டின் வினைத்திறனை உறுதிசெய்வதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கொலன்னாவ எரிபொருள் களஞ்சியப்படுத்தல் தாங்கிகள் மூன்றை மீள நிர்மாணிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் சக்திவலு அமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கான கொந்தராத்து பொறுப்பு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட மீள்நிர்மாணக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக இந்தோ - ஈஸ்ட் என்ஜினியரிங் அன்ட் கன்ஸ்ரகன் (லங்கா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் வசம் 942.47 மில்லியன் ரூபாவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புத்தளம் அனல் மின்நிலையத்திற்காக விரைவு கொள்வனவின் கீழ் 3 லட்சம் மெட்ரிக் தொன் நிலக்கரியை சுவிஸ் சிங்கப்பூர் ஓவர்சீஸ் என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து 16.18 மில்லியன் டொலர்களுக்குக் கொள்வனவு முன்வைக்கப்பட்ட யோசனைக்கும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

## 10 பல்கலைக்கழகங்கள் புதிதாக அமைக்க ஏற்பாடு

### என்கிறார் கல்வி அமைச்சர்

நாட்டில் புதிதாக 10 பல்கலைக்கழகங்களை அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்திருப்பதாகக் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தேசிய கல்வி நிறுவகத்தின் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

சமூகத்தில் கௌரவமாக வாழ்வதற்குத் தேவையான சூழல் அனைத்து பட்டதாரிகளுக்கும் கிடைக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பொருத்தமான வகையில் பாட விதானங்களில் திருத்தங்களை மேற்கொள்வது குறித்தும், இது தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும் கருத்தரங்குகளை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட அனைத்துத்தரப்பினரையும் இணைத்து இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கில் 200 ஹெக்ரேயரில் உருளைக்கிழங்குச் செய்கை

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



சுமார் 200 ஹெக்ரேயரில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு வடக்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்ற நிலையில் அவர்களுக்குத் தேவையான உருளைக்கிழங்கு விதைகளை இலகுவாகப் பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கில் 200 ஹெக்ரேயரில் உருளைக் கிழங்குப் பயிர்ச்செய்கைக்கு ஆர்வம் செலுத்தி வருகின்ற நிலையில் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் உருளைக்கிழங்கு விதைகளைப் பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

மேலும் குறித்த திட்டம் வடக்கில் வெற்றியளிக்குமாயின் உருளைக்கிழங்கு இறக்குமதியைக் கணிசமான அளவு குறைத்து அந்நியச் செலாணியை மீதப்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துடன் எதிர்காலத்தில் உருளைக்கிழங்கின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தின்பண்டங்களை உற்பத்தி செய்யும் சர்வதேச தரத்திலான தொழிற்சாலைகளை நிறுவி வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும் எனவும் கூறினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களை வரவேற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவது தற்போதைய அரசின் நோக்கங்களில் ஒன்று என்ற அடிப்படையில் வடக்கு விவசாயிகளின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் தேவையான உருளைக்கிழங்கு விதைகள் பெற்றுக்கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

அமைச்சரின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்படி விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## சரத் வீரசேகரவின் நிலைப்பாட்டுக்கு பொதுஜன முன்னணிக்குள் எதிர்ப்பு!

கொழும்பு, செப். 05

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர வெளியிட்ட கருத்துக்கு ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் எதிர்ப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மாகாண சபைகள் இன்றி கடந்த காலங்களில் நாடு இயங்கியுள்ளது. அப்போது நாட்டுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட்டிருக்கவில்லை. இதனால் இந்த சபைகள் அவசியமானதா? என்று ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை சமர்பிக்கவுள்ளதாக சரத் வீரசேகர தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டிருந்த, மாகாண சபை உறுப்பினர்களின் ஒன்றியத்தைச் சேர்ந்தோர் சரத் வீரசேகரவின் கருத்துக்கு அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.




கூடிய சீக்கிரத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு நாங்கள் தற்போதைய அரசுக்கு கோரிக்கையை முன்வைப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம். அதேபோன்று இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர மாகாண சபைகள் தொடர்பாக வெளியிட்டு வரும் கருத்துக்கு எமது அதிருப்தியை வெளியிடுவதற்கும் நாங்கள் ஏகமனதாக தீர்மானம் மேற்கொண்டுள்ளோம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மைத்திரியின் தடம்புரள்வு

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை வலிமைப் படுத்தும் திருவிழா மீள ஆரம்பித்து விட்டது.

பல அர்ப்பணிப்புகளுக்கு மத்தியில் கொண்டு வரப்பட்ட 19 ஆவது திருத்தம் கழுவேறப் போகின்றது.

அதில் வேடிக்கை என்னவென்றால் 19 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தமையின் பிதாமகர் தானே என்று தமக்குத் தாமே புகழாரம் சூட்டி, அதில் அரசியல் செய்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே, அந்த 19 ஆவது திருத்தத்தை மாற்றியமைக்கும் இருபதாவது திருத்த முயற்சிக்கும் உடந்தையாக இருக்கின்றமையாகும்.

நம் மத்தியில், ஊர் வழக்கில் ஒரு பேச்சு உண்டு. குளத்துடன் கோபித்துக் கொண்டு என்னவோ கழுவாமல் விடுவது என்பார்கள். அது போன்ற ஒரு விளக்கத்தை, இருபதாவது திருத்தத்தை ஆதரிக்கும் தமது நடவடிக்கைக்குக் கூறுகின்றார் மைத்திரிபால சிறிசேன. ரணிலுடன் கோபித்துக் கொண்டு இந்த ஏற்பாடாம்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு 18 ஆம் திருத்தம் மூலம் கொடுத்த கட்டுமட்டில்லா அதிகாரங்களே ஜனநாயக வீழ்ச்சிக்கும், இருண்ட யுக ஆட்சிக்கும், மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டமைக்கும், அளவுகணக்கின்றி அராஜகங்கள் அரங்கேறியமைக்கும் பிரதான காரணங்கள் என்றுதான் 2015 ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரம் செய்தார் மைத்திரிபால சிறிசேன.

அந்தத் தேர்தலில் தாம் வெற்றி பெற்றதும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அந்த அதிகாரங்கள் பலவற்றையும் – குறிப்பாக 18 ஆவது திருத்தத்தின் மூலம் மஹிந்த ராஜபக்ஷ சுவீகரித்த பல அதிகாரங்களையும் – வெட்டிக் குறைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தார் மைத்திரியார்.

அதை வரலாற்றுச் சாதனையாகப் பிரகடனப்படுத்தித் தமக்குத் தாமே புகழாரம் சூட்டவும் அவர் தவறவில்லை.

ஆட்சியில் இருக்கும் போது தன்னுடைய நிறைவேற்று அதிகாரத்தையும் பதவிக் காலத்தையும் வெட்டிக்குறைத்த ஒரே ஜனாதிபதி தாமே என்று தம்மைத் தாமே பீற்றிக் கொள்ளவும் அவர் பின் நிற்கவில்லை.

தமது பதவிக் காலத்தின் அந்தத்தில், முன்னர் தாம் வெட்டிக் குறைத்த அதிகாரத்தைத் தாம் பிரயோகிக்கவும், தாம் குறைத்த பதவிக் காலத்தை அனுபவிக்கவும் முயன்று அவர் தோற்றுப் போனார்.

நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தைத் தாமே முன்னின்று கொண்டு வந்த 19 ஆவது திருத்தம் மூலம் மட்டுப்படுத்திக் குறைத்து விட்டு, பின்னர் அதே அதிகாரத்தை அவர் பிரயோகித்து, அத் தவறுக்காக உயர் நீதிமன்றத்திடம் 'செம' குட்டு வாங்கினார்.

அது போல, 19 ஆவது திருத்தத்தினால் வெட்டிக் குறைக்கப்பட்ட தமது பதவிக் காலத்தைத் தாம் பயன்படுத்த முடியாதா என்ற நப்பாசையில் கடைசி நேரத்தில் உயர் நீதிமன்றத்தை அணுகித் தோற்றுப் போனார் அவர்.

இப்படித் தன்னுடைய ஜனாதிபதி ஆட்சிக் காலத்திலேயே முன்னுக்குப் பின் முரணாக நடந்து, தன்னையும் குழப்பி, நாட்டையும் குழப்பிய அவர், இப்போது அடுத்த கட்டத் தடம்புரள்வுக்குத் தயாராகி விட்டார்.

அரசமைப்பின் 18 ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை வெட்டிக் குறைப்போம் என்ற பிரசாரத்துடன் அதிகாரத்துக்கு வந்து, அதன்படி 19 ஆம் திருத்தம் மூலம் அதனைக் குறைத்த மைத்திரியார், மீண்டும் அதே அதிகாரங்களை ஜனாதிபதிக்கு அளிக்கும் 'சிறுமைத்தனத்துக்கு' தானும் ஓர் எம்.பியாக இருந்து, வாக்களித்து, ஆதரித்துத் துணை போகின்றார்.

அப்படிப் போவதற்கு அவர் கூறும் சமாதானம் – சப்புக்கட்டுச் சாட்டு – வேடிக்கையானது.

"கடந்த நல்லாட்சியில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் காரணமாகவே நாம் இருபதாவது திருத்தத்தை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுக்கிறோம்" – என்று அவர் கூறுகின்றார்.

"நாடாளுமன்றுக்கு அதிக அதிகாரங்கை வழங்கினேன். அதை ரணில் குழுவினர் துஷ்பிரயோகம் செய்தனர். நாட்டை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்தனர். நாட்டை நல்வழிப் பாதையில் கொண்டு செல்ல அவர்கள் இடமளிக்கவில்லை.

"நல்லாட்சியில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களினால் 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்" – என்று சப்புக் கட்டுக் காரணம் கூறுகின்றார் அவர்.

ரணிலின் போக்கினால் 19 ஆவது திருத்தத்தின் நடைமுறையாக்கம் பிழைத்துப்போன கசப்பான அனுபவத்தைக் காட்டி, இருபதை ஆதரிக்கப் போகும் அவர், இதே இருபது வழங்கும் அதிகாரத்தை முன்னர் 18 ஆம் திருத்தம் மூலம் பெற்றுக் கொண்டு மஹிந்தர் ஆட்சி நாட்டை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்தமையை மறந்து போனது எங்ஙனம்?

# வெளிநாட்டில் சிக்கியுள்ள இலங்கையரை கட்டம் கட்டமாக அழைத்துவர நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, செப்.05

மத்திய கிழக்கு உள்ளிட்ட வெளிநாடுகளில் சிக்கியுள்ள அனைத்து இலங்கையர்களையும் கட்டம் கட்டமாக நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும்.

– இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இராஜகிரியவிலுள்ள கொரோனா ஒழிப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனா வைரஸ் இன்று முழு உலகிலும் சமூகத்தினுள் பரவியுள்ள நோயாகியுள்ளது. இந்த வைரஸைச் சமூகத்தினுள் பரவாமல் கட்டுபடுத்தியுள்ள ஒரே நாடு இலங்கையாகும். ஜனாதிபதியினுடைய நேரடித் தலையீட்டின் காரணமாகவே எம்மால் இதனை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது.

மத்திய கிழக்கு உள்ளிட்ட உலகில் ஏனைய பல நாடுகளிலிருந்தும் பல இலங்கையர்கள் நாட்டுக்கு வர எதிர்பார்த்துள்ளனர். எனினும், எமது பிரதான பொறுப்பு நாட்டிலுள்ள மக்களைக் கொரோனாவிலிருந்து பாதுகாப்பதாகும். அது அரசு என்ற அடிப்படையில் எமக்குக் காணப்படும் பாரிய பொறுப்பாகும்.

நாட்டுக்கு வர எதிர்பார்த்துள்ள மத்திய கிழக்கு உள்ளிட்ட ஏனைய பல்வேறு நாடுகளிலிருந்து சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்களைக் கட்டம் கட்டமாக அழைத்துவர நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்போது எம்மால் முடிந்தளவுக்கே அவர்களை அழைத்துவர முடியும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் எமக்கு மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டிய தேவையுள்ளது.

காரணம் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் சிறு தவறு ஏற்பட்டாலும் மீண்டும் சமூகத்தினுள் வைரஸ் பரவல் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளதைப் போன்று சுவாசம் மூலமும் கொரோனா வைரஸ் பரவக்கூடும். இவ்வாறான நிலையில் உலகிலேயே கொரோனா வைரஸிடமிருந்து மக்களைப் பாதுகாத்துள்ள ஒரேயொரு நாடு இலங்கையாகும்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை அரசு என்ற ரீதியில் எவ்வாறேனும் நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும் என் பதை உறுதியாகக் கூறுகின்றோம். எனினும், ஒரே தடவையில் அனைவரையும் அழைத்து வர முடியாது. இராணுவத்தினரால் நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பலத்தின் அடிப்படையிலேயே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த சந்தர்ப்பம் கிடைத் துள்ளது.

தனிமைப்படுத்தல் நிலையங்களில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடு திரும்பியுள்ளனர். இதேபோன்று வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவது குறித்து தீர்க்கமாகவும் ஆழமாகவும் சிந்தித்து முறைப்படி கட்டம் கட்டமாக அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டு மக்களின் சுகாதார பாதுகாப்பைப் பற்றி சிந்தித்தே இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

# தொழில்வாய்ப்பை ஏற்படுத்த வேலைத்திட்டம் அவசியம்!

## என்கிறார் நாமல் ராஜபக்ஷ



இளைஞர் சேவைகள் மன்றத்தின் பயிற்சிப் பாடநெறிகளைப் பயில விரும்பும் இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி அதிகார சபையின் ஒத்துழைப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத் துறை அமைச்சில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிற்கும் ராஜாங்க அமைச்சர் திருமதி சீதா அரம்பே பொலவிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே இவ்வாறு கலந்துரையாடப்பட்டது.

இதனூடாக உலகத் தொழிற் சந்தைக்கு ஏற்றவிதத்தில் பாடநெறிகளைத் தெரிவு செய்வதற்கு அவர்கள் வழிகாட்டப்படுவார்கள் என்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இளைஞர் யுவதிகளைத் தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை வகுப்பது இவ்விரு அமைச்சுக்களினதும் பொறுப்பாகும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசை விமர்சிக்கின்றார் முத்தட்டுவே ஆனந்த தேரர்

கொழும்பு, செப்.05

இலங்கையில் வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கு பொருத்தமற்ற நபர்களை அரசாங்கம் இதுவரை நியமித்துள்ளது என்று புனித முருத்தெட்டுவே ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

நாரஹன்பிடயில் அமைந்துள்ள அபயராம விகாரையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:–

அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்களில் சிலர் தேவையான காலங்களில் காணப்படவில்லை.

இதுபோன்ற முடிவுகளை எடுப்பதற்கு முன்பு அவர்கள் குறித்து ஓர் ஆய்வு செய்யப்பட வேண்டும். பல அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று மக்கள் கருத்தைக் கேட்பவர்கள் அல்லர்.

எனவே, தலைவர்களின் புகழைப் பாட நான் தயாராக அல்லன். குறைகளைப் பொதுவில் சுட்டிக்காட்டுவதற்கு முன்வருவேன். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழரின் வரலாற்று உண்மையைக் கூறியமைக்காக விக்கியைக் கைது செய்யக் கோருவது வேடிக்கை!

## அவைத் தலைவர் சிவஞானம் கூறுகின்றார்



யாழ்ப்பாணம்,செப்.04
தமிழர்களுடைய வரலாற்று உண்மையை கூறிய விக்னேஸ்வரனை கைது செய்வோம் என கூறுகின்றமை வேடிக்கையான விடயம் என்கின்றார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவருமான சி.வீ. கே.சிவஞானம்.

கிழக்கு மரபுரிமை செயலணியின் உறுப்பினர் எல்லாவல மேத்தானந்த தேரர் தெரிவித்த கருத்துத் தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழர்களுடைய பூர்வீகங்கள், இந்து ஆலயங்கள் பரவிக்கிடக்கின்றன - இலங்கைமுழுவதும், உலகம்முழுவதும். அதிலும் வடக்கு, கிழக்கில் வரலாறுகள், கல்வெட்டுக்கள், ஆதாரங்கள் பெருமளவில் காணப்படுகின்றன.

அதனைவிட 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில், ஜே.ஆர். ஜெயவர்த்தன - ராஜீவ்காந்தி ஒப்பந்தத்திலே, வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் தமிழ் பேசும் மக்களுடைய வரலாற்று ரீதியான வாழ்விடம் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இரண்டு அரசாங்கத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த எல்லாவல மேத்தானந்த தேரரை விட ஆயிரம் மடங்கு வரலாறு தெரிந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அதனை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

வரலாற்று ரீதியாக - ஆவண ரீதியாக - இந்த மண்ணிலேயே தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்குஆதாரங்கள் உண்டு.

அதனைவிட வேறு எந்தஆவணம் வேண்டும் இந்த எல்லானந்த தேரருக்கு? இது ஏற்கனவே, எப்போதுமே, நான் பேசிக் கொண்டு இருக்கின்ற ஒரு விடயம். அதைத்தான் விக்னேஸ்வரனும் தனது கருத்தாக தெரிவித்திருக்கின்றார். அவர் புதிதாக எதையும் இறக்குமதி செய்துகூறவில்லை. அவர் வரலாற்றைத்தான் தெரிவித்திருந்தார்.

சிங்களஏகாதிபத்தியம் ,சிங்கள மேலாதிக்கம் ஒரு மொழி, ஒரு இனம் வாடகை வீட்டில் குடியிருப்போர் என்று பல்வேறுபட்ட கருத்துகளை தென்னிலங்கையில் தெரிவித்துவருகின்றது. எனவேவரலாற்று ரீதியாக நாங்கள்தான் பூர்வீகக் குடிகள்.

கடந்த 2000 ஆண்டுகளாக சிங்களவர்களும் தமிழர்களும் இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நான் பெரிது, நீ பெரிதென்று இல்லாமல் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம், வரலாற்று ரீதியாக அவர்களும் வாழ்ந்திருக்கின்றார்கள். அதை வைத்துக் கொண்டு விக்னேஸ்வரனை கைது செய்ய வேண்டும், அவரது கடவுச்சீட்டைப் பறிக்கவேண்டும் என்று அச்சுறுத்தல் விடுதல் என்பது ஒரு வேடிக்கையான வியமாக காணப்படுகின்றது.

பெரிய விடயம் என்னவென்றால் கிழக்கு மரபுரிமை செயலணிக்கு அவர் ஒரு முக்கிய உறுப்பினராகவுள்ளார். இனி வரும் காலங்களில் எவ்வாறான சிபாரிசுகளை அவர் செய்யவுள்ளார், அதிலும் தமிழருக்கு, இந்துக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுவாரோ என்ற கேள்வியும் எழுகின்றது. - என்றார்.

## மணல்வீதி இல்லாத மாநகரம் கருத்திட்டம் மட்டக்களப்பு மாநகரசபையால் முன்னெடுப்பு

மட்டக்களப்பு, செப். 05
மட்டக்களப்பு மாநகர சபையின் 'மணல் வீதியில்லா மாநகரம்' எனும் கருத்திட்டத்தின் ஊடாக மணல் வீதிகளை கிறவல் வீதியாக செப்பனிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி பணிச்சையடி பண்ணை வீதி, சின்ன ஊறணி மாதர் சங்க வீதி, மயாநாட்சி அம்மன் குறுக்கு வீதிகள் மற்றும் இருதயபுரம் மயாண வீதி ஆகிய வீதிகளை கிறவல் வீதியாக அபிவிருத்தி செய்யும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

மாநகர சபையின் சொந்த வருமானத்தின் மூலமாகவும், பொது மக்களின் வரிப்பணத்தின் ஊடாகவும் மாநகர சபையின் முழுமையான வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணிகளை மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர சபையின் உறுப்பினர்களான க.ரகுநாதன், வி.பூபாலராஜா, இரா.அசோக் மற்றும் மாநகர பொறியியலாளர் சித்திராதேவி லிங்கேஸ்வரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

## வீடு புகுந்து தொலைபேசி திருட்டு சண்டிலிப்பாயில் இருவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 05
சண்டிலிப்பாய் - மாகியப்பிட்டி பகுதியிலுள்ள வீடொன்றில் 8 கையடக்கத் தொலைபேசிகளைத் திருடிய குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டியிலுள்ள வீடொன்றில் கடந்த வாரம் பகல்வேளை, வீட்டிலிருந்தவர்கள் வெளியில் சென்றிருந்த நிலையில் 8 தொலைபேசிகள் திருட்டுப் போயிருந்தன.

இந்தச்சம்பவம்தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில், வீட்டில் குடியிருந்தவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.

அவர்கள் கொடுத்த முறைப்பாட்டுக்கமைய மேற்கொண்ட விசாரணையில், மாகியப்பிட்டியைச் சேர்ந்த இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரையும் தடுப்பு காவலில் வைத்து, மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டை இனி தொடர்ந்தும் ராஜபக்ஷக்களே ஆள்வர்!

## ஹிருணிகா எம்.பி. காட்டம்



நாட்டில் தொடர்ந்தும் ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சியே நடைபெற உள்ளது. தற்போது கோட்டபய ராஜபக்ஷ, அவரைத் தொடர்ந்து பஸில் ராஜபக்ஷ, அவரைத் தொடர்ந்து நாமல் ராஜபக்ஷ, என்று ராஜபக்ஷக் களின் குடும்ப ஆட்சியே தொடர்ந்து நடைபெற இருக்கின்றது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

மக்கள் மனங்களில் ஏற்பட்ட விரக்தியின் காரணமாகவே அரசாங்கத்திற்குப் பெரும்பான்மை அதிகாரத்தை அவர்கள் வழங்கியுள்ளனர்.

அத்துடன் இன்று ஜனாதிபதி, கிராமப் பகுதிகளுக்குச் சென்றால், கடவுள் வருகிறார் எனக் கூறும் நாடு இது. நேற்று முன்தினம் நாடு முழுவதும் பலத்த மழை பெய்து இருந்தது.

இதன்காரணமாக ஜனாதிபதி விமானத்தின் ஊடாக நாடு முழுவதும் சென்றமையால் இருக்கலாம். இவ்வாறு மக்கள் மனநிலை இருக்கும் போது அரசமைப்பு திருத்தம் தொடர்பாகக் கலந்துரையாடுவது பொய் யான விடயமாகும்.

ஆகவே கொடுப்பதை உட்கொண்டு விட்டு வேறு எதற்காவது காத்திருப்பது தான் தற்போது செய்ய வேண்டிய விடயம்.

இதேவேளை 19 ஆவது திருத்தம் நீக்கப்பட்டால் ஜனாதிபதி பதவிக்காலம் மீண்டும் வரம்பற்றதாக இருக்கும்.

அதாவது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குப் பின் பஸில் ராஜபக்ஷ, அவருக்குப் பின், நாமல் ராஜபக்ஷ என நாட்டில் ஆட்சி நடைபெறும்.

இவ்வாறு ராஜபக்ஷக்கள் மாத்திரமா அரசியல் செய்ய வேண்டும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# என்னுடைய வெற்றிக்காக சாராயம், பணமா? நிரூபித்தால் அரசியலிலிருந்து விலகுவேன்

## விக்கிக்கு அங்கஜன் சவால்



பொதுத் தேர்தல் பிரசாரக் காலத்தில் நான் ஒருவருக்கேனும் சாராயம் வாங்கிக்கொடுத்தமையையோ அன் றேல் ஐயாயிரம் ரூபா பணத்தைக் கொடுத்தமையையோ சி.வி. விக்னேஸ்வரன் நிரூபிப்பாரேயானால் அரசியலை விட்டுவிட்டுப் போவதற்குத் தயாராக இருக்கின்றேன்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து இம்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி. விக்னேஸ்வரன் சிங்கள ஊடகமொன்றுக்கு அண்மையில் நேர்காணலொன்றை வழங்கியிருந்தார்.

இதன்போது அங்கஜன் இராமநாதன் யாழ்.மாவட்டத்தில் அதிகூடிய விருப்புவாக்குகளைப் பெற்றுள்ளமை குறித்து அந்த ஊடகம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த சி.வி. விக்னேஸ்வரன், சாராயம் மற்றும் பணத்தைக் கொடுத்ததன் மூலமே அது சாத்தியமானது என்று கருத்து வெளியிட்டிருந்தார்.


இது தொடர்பாக அங்கஜன் இராமநாதன் கருத்து வெளியிடுகையில், சி.வி. விக்னேஸ்வரன் தன் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பாரேயானால் அரசியலை விட்டுவிட்டுப் போவதற்குத் தான் தயாராகவுள்ளேன் என ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கடலரிப்பு, இல்மனைட் மாபியாக்களிடமிருந்து

# திருக்கோவில் பிரதேசத்தை காப்பாற்ற முன்வாருங்கள்!

● செல்வி விநாயகமூர்த்தி



அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேசமானது இயற்கை வளம் நிறைந்த பசுமையான ஒரு பிரதேசமாகும் .கடல் மற்றும் தரைவளங்கள் அதன் முதுகெலும்பாகக் காணப்படுகின்றது. தென்கிழக்குக் கடற்கரையில் இயற்கை எழிலுக்குப் பெயர்போன இடமாக திருக்கோவில் மற்றும் அறுகம்பை திகழ்கின்றது.

இத்தகைய எழில் வளத்துக்கும் நீர்வளத்துக்கும் பெயர்போன திருக்கோவில் பிரதேசமானது அண்மைக்காலமாக மெல்லக் கொல்லும் கடலரிப்பு காரணமாக இப்பிரதேசம் பாரிய அழிவை எதிர்நோக்கி வருகின்றது.

வடக்கே பெரியநீலாவணை முதல் தெற்கே அறுகம்பை வரை 2004 ஆழிப்பேரலைக்குப் பின்னர் வேகமான கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றமையும் சூறாவளி, சுனாமி ஆகிய இயற்கைப் பேரழிவுக்கு முகம்கொடுத்து பாரிய அழிவைச் சந்தித்து வருகின்ற ஒரு பிரதேசமாகும் காணப்படுகின்றது.

கடற்கரையிலிருந்து சுமார் 500 மீற்றர் அளவான தூரம் வரை மண்ணரிப்புக்குள்ளாக்கப்பட்டு கடல் நீர் பல தடவைகள் திருக்கோவில் பிரதேசங்களில் உட்புகுந்துள்ளது. நீலாவணை தொடக்கம் அறுகம்பை வரையான 95 கீலோ மீற்றருக்கு உட்பட்ட பிரதேசம் கடலரிப்பால் பெருமளவு நிலங்கள் காவுகொள்ளப்பட்டு கடல் விழுங்கும் கிராமங்களாக மாறியுள்ளன.

உலகலாவிய ரீதியில் காலநிலை மாற்றத்தால் கடல் மட்டம் உயர்ந்து செல்லும் நிலையில் பெருமளவு நிலப்பகுதிகள் கடலால் காவுகொள்ளப்படும் அபாயம் நிலவி வருகின்றது. அக்கரைப்பற்று, சின்ன



முகத்துவாரம், தம்பட்டை, தம்பிலுவில், திருக்கோவில், விநாயகபுரம், தாண்டியடி, கோமாரி, பொத்துவில், அறுகம்பை முதலான பிரதேசங்கள் கடலரிப்புக்குள்ளாகி வரும் நிலையில் கிழக்கிலங்கையில் வரலாற்றுப் புகழ்பெற்ற சித்திரவேலாயுதசுவாமி ஆலய முன்பகுதியும் கடலரிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

ஆலயத்துக்குச் சொந்தமான தீர்த்தமாடும் கிணறு, அதனோடு இணைந்த மீனவர் கட்டடம் மற்றும் கடற்கரை வீதியும் கலடரிப்பால் நீரில் மூழ்கியுள்ளன. இதேவேளை, மீனவர்களது வள்ளங்கள், மீன்பிடி வாடிகள், மீனவ கட்டடங்கள், குடியிருப்புக்கள், மயானம், வீதிகள் என்பன கடலரிப்பால் காவுகொள்ளப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.

மீனவர்களால் வள்ளங்கள் நிறுத்தி வைக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் பெறுமதி வாய்ந்த பல வள்ளங்கள் கடல் அலைகளினால் அடித்துச் செல்லப்பட்ட துயர் தாங்கிய மீனவர் கதைகளும் இங்குள்ளன.

இதேவேளை, கடல் கரைகளில் நடப்பட்டுள்ள தென்னை மரங்கள் வேகமான கடலரிப்பால் கடலுக்கு இரையாகியுள்ளன. இதனால் தெங்கு செய்கைக்கும் இப்பகுதியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதேவேளை, கடற்கரை பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### கடலரிப்புக்கான காரணங்கள்

பொதுவாக காற்று வேகம், கடல் நீரோட்டம், அலைவேகம் போன்ற இயற்கை காரணிகளாலும் கடலோர மண் அகழ்வு, கடலோர ஆக்கிரமிப்புக்கள், இல்மனைட் அகழ்வு போன்ற மனிதச் செயற்பாடுகள் காரணமாகவும் கடலரிப்பு ஏற்படுகின்றது. இதனால் கடல் நீர் உட்புகுதல், குடிதண்ணீர் உவராதல், மனித வாழ்விடங்கள் இழக்கப்படல் முதலான அனர்த்தங்கள் நிகழக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

2004இல் பாரியளவில் சுனாமிக்கு முகம்கொடுத்து அதிக சேதங்ளையும் உயிரிழப்புக்களையும் எதிர்கொண்ட இப்பிரதேசம் மேற்சொன்ன காரணிகளால் மீண்டுமொரு இயற்கை அனர்த்தம் ஏற்படுமாயின் அழிவுகள் பாராதூரமானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இதேவேளை, உரிய அதிகாரிகள் கவனத்துக்குக் கடந்த ஆண்டுகளில் கொண்டு சென்ற போதும் இவற்றைத் தடுப்பதற்கான மாற்றீடான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்பவில்லை.

மெல்லக்கொள்ளும் கடலரிப்பால் இப்பிரதேசம் காவுகொள்ளப்படும் அபாயத்தை எதிர்நோக்கியிருக்கும் வேளையில் அண்ணையில் இல்மனைட் அகழ்வுக்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்காகத் தனியார் நிறுவனம் ஒன்று அங்கு கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஆய்வுகளை நடத்தியுள்ளது.

கடந்த இரு வருடங்களுக்கு முன்பு திருக்கோவில் பகுதியில் ஆஸ்ரேலிய தனியார் கம்பனி ஒன்று இல்மனைட் அகழ்வுக்கான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தபோதும் பொதுமக்களின் எதிர்ப்பையடுத்துக் கைவிடப்பட்ட நிலையில் இம்மாதம் முதலாம் திகதி வேறொரு தனியார் கம்பனி பொத்துவில் பிரதேசத்துக்குட்பட்ட தாண்டியடி, உமிரி பிரதேசத்தில் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஆய்வை மேற்கொண்டுள்ளது.

இருப்பினும் உரிய அதிகாரிகளினாலும் பொதுமக்களின் எதிர்ப்பாலும் இந்த நடவடிக்கை தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவவாறன கனிய வள கொள்ளையர்கள் எமது கிழக்கு கடல் பரப்பைக் குறிவைத்து படையெடுக்கக் காரணம் இலங்கையானது தொல்காலப்பாறையில் அமைந்திருப்பதோடு கனிய வளங்கள் இலங்கை வடகிழக்கு கடப்பரப்பிலே நிறைந்து வழிந்து கிடக்கின்றன.

நாட்டின் தேசிய வருமானத்தில் 2% சதவீதமான இலாபத்தை இலங்கைக்கு அந்நியச் செலவாணியாக ஈட்டித்தரும் மணல் படிமங்கள் கிழக்கில் பல இடங்களில் கொட்டிக்கிடக்கின்றன. இல்மணைட் மணல் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் எமது இலங்கை முதன்மை பெறுகின்றது. இருப்பினும் குறிப்பிட்ட கடற்கரைப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்படும் அகழ்வால் ஆழம் அதிகரிக்கப்படுவதோடு கடலரிப்பால் வருடந்தோறும் காவுகொள்ளப்பட்டு அழிவின் விளிம்பில் எமது பிரதேசம் நிற்கும். கொள்ளை இலாபம் காணும் தனியார் கொள்ளையர்களின் கனிய வளங்களின் அபகரிப்பால் எமது பிரதேசம் மேலும் மேலும் அச்சுறுத்தலை எதிர்நோக்க வேண்டியதொரு பாரிய சூழ்நிலையே ஏற்படும். இவ்வாறான வளங்களைச் சுரண்டுவதற்கு எமது பிரதேச அதிகாரிகளும் மறைமுகமாகத் துணைபோவது வேதனைக்குரிய விடயமாகும்.

திருக்கோவில் பிரதேசத்துக்கு மக்கள் தனது ஜீவனோபாயத் தொழிலாக விவசாயம், மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். இவ்வாறு இல்மனைட் அகழ்வால் நீர் நிலைகளின் சமநிலைகள் பாதிக்கப்பட்டு நீர்வளம் குன்றுவதோடு குளங்கள், ஆறுகள் பாதிக்கப்படுவதோடு இல்மனைட் அகழ்வின் பின்னர் 500 இற்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வாழ்வாதாரம் இன்றி பாதிக்கப்படப் போகின்றது.

இல்மனைட் அகழ்வின்போது கடற்கரை பிரதேசங்களிலுள்ள நிலத்தின் மேலுள்ள தாவரங்கள் அகற்றப்படுவதால் வெப்பம் நேரடியாகப் பூமியைத் தாக்குவதுடன் அருகாமைக் கடலிருந்து வெளிவரும் குளிர் காற்று வெப்பமடைவதால் மழையின் அளவிலும் தன்மையிலும் மாற்றமடையும். இதனால் கடலுக்கருகாமையில் குடியிருப்புக்கள் இருப்பதால் அருகிலுள்ள நிலப்பிரதேசங்களில் கடல் நீர் உட்புகுவதால் குடிதண்ணீரில் உப்பு நீர் கலந்து பாவனைக்கு உதவாத நீராகவும் நீர் பற்றாக்குறையும் வரட்சியும் ஏற்படலாம்.

இதேவேளை, இல்மனைட்டுக்கான தாது மணல் இப்பகுதியிலே பிரித்தெடுக்கப்படுவதால் இராசயன கதிர்வீச்சுதாக்கங்கள் ஏற்பட்டு பின்னாலில் மரபணு நோய், புற்றுநோய் பாதிப்பு ஏற்படுகின்றது எனவும் கூறப்படுகின்றது.

எமது பிரதேசத்தில் மண் மாபியாக்களால் பாரிய அழிவை ஏற்படுத்தப்படுத்தப் போகின்ற இந்த நடவடிக்



கையைத் தடுத்து நிறுத்தவதோடு எமது பிரதேசத்தின் அழகுமிகு கரையோரம் மற்றும் இயற்கை சமநிலையும் பாதுகாக்கப்பட வேண்டும். எனவே, எமது பிரதேசத்தைக் கடலரிப்பு, இல்மனைட் தொழிற்சாலை என்பவற்றிலிருந்து காப்பதோடு மேற்படி இல்மனைட் மாபியாக்களை எமது பிரதேசத்திலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கையை உரிய அதிகாரிகளும் இப்பிரதேச மக்களும் எடுக்க நிச்சயம் முன்வரவேண்டும்.

# குடும்ப ஆட்சிக்காக அரசமைப்பு மாற்றம்; அனைத்து மக்களும் வெட்கப்படவேண்டும்

## கடுமையாகச் சாடுகின்றது சஜித் அணி



கொழும்பு, செப்.05

ராஜபக்ஷ அரசு குடும்ப ஆட்சிக்காக அரசமைப்பு திருத்தத்தையே மாற்ற முயற்சிப்பது தொடர்பில் நாட்டு மக்கள் அனைவரும் வெட்கப்பட வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

20ஆவது திருத்தத்தில் 18ஆவது திருத்தத்திலுள்ள விடயங்களே உள்ளடக்கப்பட்டுள்ளது. தனிநபர் கையில் நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்திலே இந்தப் புதிய அரசமைப்பு திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

19 ஆவது திருத்தத்தை நீக்குவதே அரசின் பிரதான நோக்கமாக இருக்கின்றது. இந்தத் திருத்தமானது மக்கள் பக்கமிருந்து அவர்களுக்காகவே கொண்டு வரப்பட்டது. 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை மாற்றியமைக்க வேண்டும் என்று பலர் கோரிக்கை விடுத்து வந்த போதிலும் யாரும் அதனை மாற்றி அமைக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தங்களது ஆட்சியில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை மாற்றியமைப்பதாக வாக்குறுதி வழங்கியிருந்த போதிலும், அவர்கள் அதனை நிறைவேற்றவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ அவருடைய ஆட்சிக் காலத்தில் 18 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நிறைவேற்றியிருந்தார். இதன்போது ஏற்கனவே இருந்த ஜனாதிபதி பதவிக் காலத்தை மாற்றியமைத்து , நிறைவேற்று அதிகாரத்துக்கு மேலும் பலத்தைப் பெற்றுக்கொடுத்தார். இதனால் மக்களே அவரைப் புறக்கணித்தனர். அதற்குப் பின்னர் வந்த நல்லாட்சி அரசால் 19 ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டதுடன் இதற்கு நாடாளுமன்றத்தில் ஒருவர் மாத்திரமே எதிர்ப்பு தெரிவித்திருந்தார். இந்தநிலையில் அரசு ஏன் 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்குவதற்கு முயற்சித்து வருகின்றது? இந்தத் திருத்தத்தில் காணப்படும் சிக்கலான விடயங்களை நீக்கி அந்தத் திருத்தத்தையே தொடர்ந்தும் செயற்படுத்தலாம் அல்லவா?

20ஆவது அரசமைப்பு திருத்தம் என்று கூறிக் கொண்டு 18 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களையே மீண்டும் கொண்டுவருவதற்கு அரசு முயற்சிக்கின்றது. இந்த நிலையில் ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களை நியமிப்பதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே காணப்படுகின்றது. ஆனால், புதிய அரசமைப்பு திருத்தத்தில் அந்தப் பொறுப்பு ஜனாதிபதிக்கு வழங்கப்படவுள்ளது. இதனால் ஆணைக் குழுக்களின் செயற்பாடுகள் பெயரளவிலானதாகவே இருக்கும்.

கடந்த காலத்தில் அலரி மாளிகைக்கு ஒருவரை அழைத்து அவருக்கு உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் வழங்கப்பட்டிருந்தமை தொடர்பில் நாம் அறிந்துள்ளோம். மீண்டும் அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே இந்த அரசமைப்பு திருத்தம் செய்யப்படப்போகின்றது. இந்தநிலையில் இது தொடர்பில் நாம் அனைவரும் வெட்கப்பட வேண்டும். அமெரிக்கப் பிரஜை ஒருவரை நாடாளுமன்றத்தில் அமர்த்துவதற்காக அரசமைப்பு திருத்தத்தையே மாற்றியமைக்கத் தீர்மானித்தமை தொடர்பில் அமெரிக்க ஆதிக்கத்துக்கு எதிராகப் பேசிவரும் அமைச்சர்களான விமல் வீரவன்ச, வாசுதேவ நானயக்கார மற்றும் அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில ஆகியோர் அவர்களது நிலைப்பாட்டை நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

அரசு மீண்டும் ஒருதனிநபரின் கையில் அதிகாரங்களை ஒப்படைப்பதற்கே முயற்சிக்கின்றது. இந்தநிலையில் ஒருவர் கையில் அனைத்துப் பொறுப்புக்களையும் பெற்றுக் கொடுத்து சர்வாதிகார ஆட்சியை செயற்படுத்துவதுதான் அரசின் நோக்கமாக இருக்கின்றதா என்று எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது - என்றார்.

# 229 இலங்கையர்கள் தாய்நாடு வந்தனர்!

கொழும்பு, செப். 05

வெளிநாடுகளில் சிக்கித்தவித்த மேலும் 229 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

நேபாளம் மற்றும் இஸ்ரேலில் பணி புரிந்து வந்த இலங்கையர்களே இவ்வாறு நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இரவு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நேபாளத்தின் காத்மண்டுவில் இருந்து 26 பேரும், இஸ்ரேலில் பணிபுரிந்த 203 இலங்கையர்களும் ஜோர்தானில் இருந்து சிறப்பு விமானம் மூலம் இவ்வாறு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர் பரி சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# அரச சிரேஷ்ட சட்டத்தரணிகள் மேல்நீதிமன்றுகளுக்கு நியமிப்பு!

நான்கு மேல் நீதிமன்றங்களுக்கு அரசசிரேஷ்ட சட்டத்தரணிகளை நியமிக்க தீர்மானிக் கப்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள ஏராளமான வழக்குகளை கருத்திற் கொண்டு ஹோமாகம, களுத்துறை, மாத்தறை மற்றும் நீர்கொழும்பு மேல் நீதிமன்றங்களுக்கு அரச சிரேஷ்ட சட்டத்தரணிகளை நியமிக்க சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளார்.

மேல் குறிப்பிட்ட ஒவ்வொரு மேல் நீதிமன்றங்களிலும் சுமார் 600 இற்கும் அதிகமான வழக்குகள் நிலுவையில் உள்ளன என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஜூரா ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

# 2 ஆயிரத்து 400 போதைப்பொருள் வழக்குகள் கடந்த 15 மாதங்களில் சட்ட நடவடிக்கைக்கு!

*கடந்த 15 மாதங்களில் 2 ஆயிரத்து 480 போதைப்பொருள் தொடர்பான வழக்குகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித்துள்ளார்.*

*அத்துடன், இந்தக் காலப்பகுதியில் பாரதூரமான போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 2 ஆயிரம் வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*மேலும், போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 235 ஆக குறைவடைந்துள்ளதாக சட்டமா தெரிவித்துள்ளார்.*

# மக்கள் பிரச்சினை தீர்ப்பதே எனது அரசியல் இலக்கு!

## என்கிறார் ஜீவன் தொண்டமான்



ஹற்றன், செப். 05

பிரச்சினைகளைப் பேசி காலத்தை ஓட்டுவதை விடவும் தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதை நோக்கமாகக்கொண்டதே எனது அரசியல் பயணம் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஹற்றனில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ஜீவன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு -

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட இடைக்காலக் கணக்கறிக்கை மூலம் எனது அமைச்சுக்கு ஆயிரத்து 56 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏனெனில் கடந்த நான்கரை வருடங்களில் கடன் அடிப்படையிலேயே மலையகத்தில் வேலைகள் நடந்துள்ளன. அவற்றை மீளச் செலுத்த வேண்டியுள்ளது.

முதலில் அடிக்கல் நாட்ட வேண்டும். கட்டடத்தை நாமே திறந்து வைக்க வேண்டும் என்ற குறுகிய அரசியல் நோக்கில் திட்டங்களை உரிய வகையில் செய்யவில்லை.

எங்களுக்கு அடிக்கல் நாட்டுவது பிரச்சினை அல்ல. செய்யும் திட்டம் முறையாகவும் பயனாளர்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

பிரச்சினைகளைப் பேசி, பேசி காலத்தை ஓட்ட முடியாது. நீங்கள் பாடசாலை பிரச்சினையை அறிவித்தீர்கள். இன்று தீர்வை வழங்கினோம்.

மைதானம் தேவையென கூறினீர்கள். இட ஒதுக்கீடு தொடர்பில் கம்பனியுடன் பேசி அனுமதி பெறப்பட்டுள்ளது. விரைவில் நிதி ஒதுக்கப்பட்டு மைதானப் பணியும் ஆரம்பமாகும். இது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமலை சந்தித்தும் கலந்துரையாடவுள்ளேன்.


அதேவேளை, கல்வி என்பது புத்தக படிப்பு மட்டும் அல்ல. அதனையும் தாண்டி பல விடயங்கள் உள்ளன. விளையாட்டு உட்பட பல்துறைகளில் மாணவர்களால் சாதிக்க முடியும்.

அதேபோல் அமைதி எனக்கூறி மாணவர்களை முடக்காமல், அவர்களுக்கு கேள்வி கேட்பதற்கான வாய்ப்புகளை ஆசிரியர்கள் வழங்கவேண்டும். அப்போதுதான் சிறந்த தலைவர்களை உருவாக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அதியுச்ச சர்வாதிகார ஆட்சிக்கு வழிகோலும் '20' வரைவை ஓரணியில் திரண்டு எதிர்ப்போம்

## பிரதான எதிர்க்கட்சிகள் சூளுரை





கொழும்பு, செப். 04

நாட்டில் நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதி தலைமையிலான அதியுச்ச சர்வாதிகார ஆட்சிக்கும், குடும்ப ஆட்சிக்கும் அடித்தளம் இட்ட அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்தை அப்படியே ஒத்ததாகவும், நல்லாட்சிக்கு வழிவகுத்த 19ஆவது திருத்தச் சட்டத்தின் பெரும் பாலான உள்ளடக்கங்கள் அடியோடு நீக்கப்பட்டும் 20ஆவது திருத்தச் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, நாடாளுமன்றத்தில் இந்தத் திருத்தச் சட்ட மூலத்தை நாம் ஓரணியில் நின்று எதிர்ப்போம். நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் மக்களை அணிதிரட்டி இதற்கு எதிராகப் போராடுவோம்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய எதிர்க்கட்சிகள் கூட்டாகத் தெரிவித்தன.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு அமைச்சரவை நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியிருந்தது. இதையடுத்து இந்தத் திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலை வருமான சஜித் பிரேமதாஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டும் வகையிலேயே அரசமைப்பின் கடந்த நல்லாட்சியில்18ஆவது திருத்தச் சட் டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தினோம். அதன்பிரகாரம் 19ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறை வேற்றியிருந்தோம். இதற்கு ராஜபக்ஷ அணியினரும்கூட சபையில் அன்று ஆதரவைத் தந்திருந்தார்கள்.

19ஆவது திருத்தச் சட்டத்துக்கமைய நாடாளுமன்றத்துக்கு அதியுச்ச அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அரசமைப்புப் பேர வையும் உருவாக்கப்பட்டது. சுயாதீன ஆணைக்குழுக்களும் நியமிக்கப்பட் டன. நாடாளுமன்றமும் நீதித்துறையும் தேர்தல்கள் ஆணைக்குழுவும் சுதந்திரமாக இயங்க அனுமதி கிடைத்தது. ஆனால், 20ஆவது திருத்தச் சட்டமூலத்தின் பிரகாரம் இவற்றில் பழையபடி ஜனாதிபதியின் தலையீடுகள் வந்துள்ளன.

அரசமைப்புப் பேரவை நீக்கப்பட்டுள் ளது. சுயாதீன ஆணைக்குழுக்கள் குறைக் கப்பட்டுள்ளன. பிரதமரை நியமிக்கும் அதிகாரமும், பிரதம நீதியரசரை நியமிக்கும் அதிகாரமும், தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரமும் மீண்டும் ஜனாதிபதி வசம் சென்றுள்ளன.

இரட்டைக் குடியுரிமை கொண்ட வர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவியேற்க 20ஆவது திருத்தச் சட்டமூலத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் சகோதரரான பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன்றத்துக்கு வரவ ழைத்து அவருக்குப் பொறுப்பு வாய்ந்த அமைச்சுப் பதவியை வழங்கி கோட்டாபய - மஹிந்த - பஸில் தலைமையிலான குடும்ப ஆட்சியையும், அதியுச்ச சர்வாதிகார ஆட்சியையும் நிலைநிறுத்தவே இந்த நடைமுறை வந்துள்ளது. இது எந்தவகையில் நியாயமானது?

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்ட நிறைவேற்றம் நாட்டின் ஜனநாயகத் துக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாக இருந்தது. ஆனால், தற்போது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள 20 ஆவது திருத்தச் சட்டமூலம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேறினால் அது ஜனநாயகத்துக்குச் சாவு மணியாக - நாட்டுக்குச் சாபக்கேடாக அமையும். எனவே, 20ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நிறை வேற்ற இடமளியோம். அதை எதிர்க்கட்சி கள் ஓரணியில் நின்று எதிர்க்கும். நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் மக்களை அணிதிரட்டி இந்தத் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராகப் போராடுவோம் -என்றனர்.

# எரியும் கப்பலில் இருந்த பணியாளர் ஒருவர் பலி

## 22 பேர் மீட்பு; எண்ணெய் கடலில் கலப்பதைத் தடுக்கக் கடும் முயற்சி




அம்பாறை, சங்கமன் கண்டி கடற்பகுதியில் தீ விபத் துக்குள்ளான எண்ணெய்க் கப்பலில் இருந்து, காணாமல் போயிருந்தவர் உயிரிழந்துள்ளார் என்று உறுதிப்படுத்தப் பட்டுளது.

சங்கமன் கண்டியிலிருந்து சுமார் 40 கடல் மைல் தொலை வில் MT New Diamon- என்ற கப்பலில் நேற்றுக் காலை தீ பரவியிருந்தது.

பனாமாவுக்குச் சொந்தமான இந்தக் கப்பல் குவைத்திலிருந்து இந்தியாவுக்கு எண்ணெய் ஏற்றிக்கொண்டு சென்ற போதே தீ விபத்துக்குள்ளாகியுள்ளது.

இலங்கைக் கடற்படையிரால் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கைகள் நேற்று முதல் தொடர்கின்றன.

இலங்கைக் கடற்படையினரின் உத விக்கு இந்தியக் கடற்படையினரும் வந் துள்ளனர்.

கப்பலில் இருந்த மாலுமி உட்பட 22 பேர் மீட்கப்பட்டுள்ளனர். பணியாளர் ஒருவர் காணாமல் போயிருந்த நிலையில் அவர் உயிரிழந்துவிட்டார் என்று இன்று காலை தெரியவந்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

தீக்காயங்களுடன் நேற்று மீட்கப்பட்ட மாலுமி கல்முனை ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார். ஏனைய 21 பணியாளர்களும் உரிய சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி பாதுகாப்பாகத் தனிமைப்படுத்தப்பட்டு ளனர் என்று இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

இந்தக் கப்பலில் 2 லட்சத்து'70 ஆயிரம் மெட்ரிக்தொன் மசகு எண்ணெய் இருப்பதால், அது கடலில் கலக்குமாக இருந்தால் அது கடல் பாதுகாப்புக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என சூழலியலாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதனால் எண்ணெய் கடலில் கலப்ப தைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை சமுத்திரவியல் பாதுகாப்பு அதிகார சபை முன்னெடுத்துள்ளது.

தற்போது அந்தக் கப்பலில் அனைத்து இயந்திரங்களும் செயலிழந்துள்ளமையால், கப்பல் இலங்கைப் பக்கமாக மிதந்து வருகின்றது எனக் கடற்படையினர் தெரி உவித்துள்ளனர்.

அது கரைக்கு வருமாக இருந்தால் பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்ப தால் அது கரைக்கு வருவதைத் தடுக்க வும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு நாடாளுமன்ற அதிகாரி கைது!

கொழும்பு, செப். 04

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் நாடாளுமன்ற அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத்திற்குவழங்கப்படும்பழங்களுக்கு அனுமதி வழங்குவதற்காக அவர் இலஞ்சம் கோரியுள்ளார் என இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாடாளுமன்றத்திற்கு வழங்கப்படும் பழங்களுக்கு அனுமதி வழங்குவதற்காக ஒருவரிடம் இருந்து 60 ஆயிரம் ரூபா் இலஞ்சம் பெற்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

# மின்சாரம் தாக்கியதில் 5 விமானப்படையினர் வைத்தியசாலையில்

திருமலை, செப் 04

திருகோணமலை சீனக்குடா விமான படை முகாமில் மின்சாரம் தாக்கிய நிலையில் ஐவர் திருகோணமலை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம் பெற்றுள்ளது.

திருகோணமலை - சீனன்குடா விமானப் படை முகாமில் நிகழ்வொன்று இடம்பெற உள்ளதாகவும் அந்த நிகழ்வுக்கு அழகுபடுத்துவதற்காக ஏணியை எடுத்துச் சென்றபோது மின்சாரம் தாக்கியதாகவும், இதில் காயமடைந்த ஐந்து விமானப் படை யினர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சீனன்குடா விமானப் படை முகாமில் கடமையாற்றி வரும் தர்மேந்திரா (வயது -24) விக்ரமசிங்க (வயது -26) ரத்னசிறி (வயது - 31) பிரதீப் குமார (வயது-31) திலகசிறி (வயது - 39) ஆகியோரே காயமடைந்தனர் எனவும் கூறப்பட்டது.

# கிழக்குத் தொல்லியல் ஜனாதிபதி செயலணிக்கு பொருத்தமான தமிழ்,முஸ்லிம் பிரதிநிதிகளை கண்டுபிடிக்க முடியவில்லையாம்

## விவேகமற்ற வீரம் ஏற்படுத்திய விளைவு என்கிறார் டக்ளஸ்

கிழக்கு தொல்லியல் சின்னங்களை பாதுகாக்கும் ஜனாதிபதி செயலணிக்கு பொருத்தமான தமிழ்,முஸ்லிம் மக்களின் பிரதிநிதிளை தெரிவு செய்வது சவாலான விடயமாக இருக்கின்றது என்று ஆதங்கத்தினை வெளியிட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த கால அரசியல் தலைமைகளின் செயற்பாடுகளும் இந்த துர்ப்பாக்கிய நிலைக்கு காரணமாக அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் மன உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் குறித்த ஜனாதிபதி செயலணிக்கு பிரதிநிதிகள் உள்வாங்கப்பட வேண்டும் என்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் பொருத்தமான இருவரை சிபாரிசு செய்யுமாறு அமைச்சரிடம் தெரிவித்திருந்தனர்.

எனினும் இதுவரை குறித்த இருவர் நியமிக்கப்படாமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒரு காலத்தில் புத்திஜீவிகளினால் நிரம்பியவர்களாக நம்மவர்கள் இருந்தனர். கடந்த காலத்தில் தமிழர்களின் தலைமைகள் என்று கூறிக்கொண்டவர்களின் விவேகமற்ற வீரத்தின் வெளிப்



பாடுகள் ஏற்படுத்திய விளைவுகளில் ஒன்றாக புத்திஜீவிகளுக்கும் தற்போது நம் மத்தியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது..

கடந்த கால ஆயுதச் செயற்பாடுகளினால் பல புத்திஜீவிகள் விவேகமற்ற முறையில் கொல்லப்பட்டுள்ளனர். அதன் காரணமாக பெருமளவானோர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். எஞ்சியிருப்பவர்களும் சமூகம் சார் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கி இருப்பதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்.

இவ்வாறான காரணங்களினால் குறித்த செயலணிக்கு பொருத்தமான தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதநிதிகளை நியமிக்க முடியாமல் இருக்கின்றது. எனினும் தொடர்ந்தும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையினால் விரைவில் இருவர் நியமிக்கப்படுவார்கள். - என்று தெரிவித்தார்.

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை -

**யாழ் பிரதேசத்தில்** -

முள்ளி, மாவடி, வட்டு இந்துக்கல்லூரி, சித்தன்கேணி சந்தி ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்படும் என்று மின்பொறியிலாளர் அறிவித்துள்ளார்.

## தனிமைப்படுத்தல் முடித்து 142 பேர் வெளியேறினர்!

கொரோனாத் தொற்று சந்தேகத்தின் பேரில் தடுத்துவைக்கப்பட்டவர்களில் 142 பேர் நேற்று (வெள்ளிக்கிழமை) தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படும் தனிமைப்படுத்தல் முகாமில் இருந்து தனிமைப்படுத்தல் நடைமுறையை முழுமையாக நிறைவு செய்த பின்னரே அவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அத்தோடு தனிமைப்படுத்தப்பட்ட முகாம்களில் மொத்தமாக 36 ஆயிரத்து 326 பேர் இதுவரை தனிமைப்படுத்தலை நிறைவு செய்துள்ளனர்.

நாட்டில் அமைக்கப்பட்டுள்ள 73 தனிமைப் படுத்தல் முகாம்களில் 7 ஆயிரத்து 746 பேர் இராணுவத்தால் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உரிமைகளை இல்லாதொழிப்பதற்காகவா அரசுக்கு மக்கள் ஆணை வழங்கினார்கள்?

## அலவத்துவல எம்.பி. கேள்வி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு தேசிய உரிமைகளை அழிப்பதற்காகவா மக்கள் ஆணையை பெற்றுக்கொடுத்தார்கள்?

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சீ. அலவத்துவல கேள்வி எழுப்பினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின்போது நாட்டின் உரிமைகளையும் கலாசாரத்தையும் பாதுகாப்பதற்காகத் தங்களை வெற்றிபெறச் செய்யுமாறு ஆளும் தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். அதற்கமைய மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசுக்கு வழங்கியுள்ளனர். ஆனால், அரசு உரிமைகளைப் பாதுகாப்பதை விடுத்து அவற்றை இல்லாதொழிக்கவே முயற்சிக்கிறது.

புவனேகபாகுமன்னனின்அரசமண்டபம் இடிக்கப்பட்டு 2 மாதங்களாகின்றன. ஆனால், அந்த விவகாரத்துடன் தொடர்புடைய எவரும் கைதுசெய்யப்படவில்லை. இதேவேளை, புத்தளம் - ஆனைவிழுந்தான் பகுதியில் காணப்பட்ட சதுப்பு நிலத்தைச் சேதப்படுத்திய குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவரும் பெகோ இயந்திரத்தின் சாரதியும் மாத்திரமே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் செயற்பாடுகளுக்குப் பின்னால் அரியல்வாதிகளின் தலையீடு இருக்கும். அவர்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

உலக உரிமையான சிங்கராஜ வனத்தையும் இவர்கள் விட்டு வைக்கவில்லை. சிங்கராஜ வனத்தில் பாதை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அதனை ஜனாதிபதி பார்வையிடச் சென்று இந்த விடயங்களை இவ்வாறு செய்யுங்கள் என்று கூறி வந்திருந்தார். ஜனாதிபதி அவ்வாறு தெரிவிப்பதற்கு முன்னர் அது தொடர்பில் சூழலியலாளர்களிடம் விளக்கம் பெற்றுக் கொண்டாரா? துறை சார்ந்த நிபுணர்களிடம் எந்த விளக்கத்தையும் பெற்றுக் கொள்ளாது வெறுமனே அங்கு சென்று பார்வையிட்டு வந்ததில் எந்தப் பயனும் இல்லை.

நாட்டின் உரிமைகளைப் பாதுகாப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்களே உரிமைகளை இல்லாதொழிக்கின்றனர். இதற்காகவா நாட்டு மக்கள் அரசுக்கு ஆணை வழங்கினார்கள்? பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் இது தொடர்பில் நாட்டு மக்களைத் தெளிவுப்படுத்த வேண்டும். நாடாளுமன்றத்திலும் விவாதிப்போம். அதுமட்டுமன்றி இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கைகளையும் எடுப்போம் - என்றார்.

# விமான நிலையங்களைத் திறந்து மக்களை ஆபத்தில் தள்ளமுடியாது

## என்கிறார் பவித்திரா வன்னியாராய்ச்சி



கொழும்பு, செப். 05

மற்றவர்களுக்காக விமான நிலையங்களைத் திறக்க அனுமதிப்பதன் மூலம் நாட்டில் வாழும் மக்களை நாம் ஆபத்தில் தள்ள முடியாது என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

விமான நிலையங்களைத் திறப்பது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவையில் ஆழமாக விவாதிக்கப்பட்டது. நாட்டில் வாழும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதே எமது முன்னுரிமை.

மற்றவர்களுக்காக விமான நிலையங்களைத் திறக்க அனுமதிப்பதன் மூலம் நாட்டில் வாழும் மக்களை நாம் ஆபத்தில் ஆழ்த்த முடியாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே, இதுவரையில் சுமார் 26 ஆயிரம் இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். மேலும் 58 ஆயிரம் பேர் நாடு திரும்ப எதிர்ப்பார்த்துள்ளனர்.

இலங்கையர்கள் மீளவும் திருப்பி அனுப்பப்படும் போது நாங்கள் சரியான திட்டத்தைக் கையாண்டு வருகிறோம். இலங்கையர்களை மீளவும் நாட்டிற்கு திருப்பி அனுப்ப தூதரகங்கள் மூலம் வெளிநாட்டு நாடுகளால் அதிக அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், அனைவரையும் ஒரே நேரத்தில் திருப்பி அனுப்புவதன் மூலம் இங்கு வசிக்கும் இலங்கையர்களை நாங்கள் ஆபத்தில் ஆழ்த்த முடியாது. - என்று அவர் கூறியுள்ளார்.

# ‘20’ஐ ஆதரிக்கும் கட்டாயத்தில் இருக்கின்றது சுதந்திரக் கட்சி!

## இப்படிக் கூறுகின்றார் மைத்திரி

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை ஆதரிக்கும் கட்டாயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இருக்கின்றது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாம் ஆதரிக்கத் தீர்மானித்துள்ளமைக்குப் பிரதான காரணம் கடந்த நல்லாட்சியில் முன்னாள் பிரதமர் ரணில் தலைமையிலான குழுவினரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளே ஆகும்.

பல அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் அரச மைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் எனது ஆட்சியில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்தச் சட்டத்தின் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் இருந்த எனக்கான அதிகாரங்களைக் குறைத்தேன். நாடாளுமன்றத்துக்கு அதிக அதிகாரங்களை வழங்கினேன். ஆனால், அதை ரணில் குழுவினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி நாட்டின் அரசியலை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்தனர். நாடாளுமன்றத்துக்கான அதிகா



ரங்களை அவர்கள் துஷ்பிரயோகப்படுத்தினர். நல்லாட்சியை நல்வழிப் பாதையில் கொண்டுசெல்லஅவர்கள் இடமளிக்கவில்லை.

இந்தநிலையில், 19ஆவது திருத்தச் சட்டத்தில் சில மாற்றங்கள் ஏற்படுத்தி 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளது.

நல்லாட்சியில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களினால் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

**நடந்து முடிந்த தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கு ஏற்பட்ட பின்னடைவு குறித்து அக்கட்சியின் மத்திய குழு கடந்த சனிக்கிழமையன்று வவுனியாவில் கூடி ஆராய்ந்தது. அக்கூட்டத்தில் வைத்து தேர்தல் சமயத்தில் வேட்பாளர்களான தனக்கும்,சிறீதரனுக்கும் கட்சிக்குள் இழைக்கப்பட்ட துரோக நடவடிக்கைகள் குறித்துத் தமிழரசு எம்.பியான எம்.ஏ.சுமந்திரன் நீண்ட பட்டோலை வாசித்தார். எழுதித் தயாரித்து எடுத்து வந்த அந்தக் குற்றசாட்டுப் பத்திரத்தின் பிரதிகளை அவர் அக்கூட்டத்தில் பங்குபற்றியோருக்கும் விநியோகித்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு.கி. துரை ராஜசிங்கத்துக்கு முகவரியிடப்பட்ட கடித வடிவத்தில் அது இருந்தது. அதன் பிரதி ஒன்று எமக்குக் கிட்டியமையால் அதனை மக்கள் அறிவதற்குப் பிரசுரிக்கலாம் என்று கருதினோம். அதன் முதல் பகுதி நேற்று பிரசுரமானது. எஞ்சிய பகுதி இன்று பிரசுரமாகின்றது.**

# சுமந்திரனுக்கு எதிராக தமிழரசுக் கட்சிக்குள்ளே தேர்தல் சமயம் கட்டவிழ்ந்த சதிச் செயற்பாடுகள்

## அவரே மத்திய குழுவில் விவரமாகப் பட்டியலிட்டார்




தேர்தலுக்கு அடுத்த நாள், அதாவது ஆகஸ்ட் ஆறாம் திகதி அன்று, வாக்கெண்ணும் நடவடிக்கைகள் யாழ் மத்தியக் கல்லூரியில் நடைபெற்ற வேளையில் நடந்த சில சம்பவங்கள் சம்பந்தமாகவும் சில விடயங்களைத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

யாழ் மத்திய கல்லூரியிலிருந்து சில மீற்றர் தொலைவிலே நான் தங்கியிருந்த போதும் கூட, வாக்கெண்ணும் நடவடிக்கைகள் நடந்து முடியும் வரை நான் அங்கு செல்லவில்லை. எனது சக வேட்பாளர்கள் சிலர் கல்லூரி வளாகத்தினுள் அமர்ந்திருந்ததை முகப்புத்தகத்தின் நேரலை மூலம் கண்டறிந்தேன்.

### சித்தார்த்தன் வந்தார்

குறித்த ஒரு தருணத்தில் திரு. சித்தார்த்தன் அங்கு வருகை தந்ததையும் இறுதி முடிவுகள் பிரகடனப்படுத்தும் நிலையத்துக்குள் சென்று தெரிவத்தாட்சி உத்தியோகஸ்தர் திரு.மகேசனோடு அவருடைய மேசையினருகில் அமர்ந்து பேசியமையியும் கண்டேன் அவர் அங்கே வந்தபோது திரு. சிவாஜிலிங்கம் அவரை அணுகி 'தர்மலிங்கத்தின் மகன் சுமந்திரனிடம் தோற்பதா?' என்று பெரிய கூச்சலை எழுப்பியிருந்தார்.

திரு. சித்தார்த்தன் தான் 2ஆம் இடத்தில் இருப்பதாகவும் நான் 5ஆம் இடத்தில் இருப்பதாகவும் உறுதிப்படுத்தப்பட்ட மூலங்களில் இருந்து தனக்கு தகவல் கிடைத்திருந்ததாக ஊடகங்களுக்குச் சொன்னார்.

### வாக்குகள் எண்ணப்படும் நிலையத்துக்குச் சென்றேன்

சிறிது நேரத்திற்குப் பிறகு எமது முகவர்கள் வாக்கெண்ணும் பணிகள் முடிவடைந்து விட்டதாகவும், முடிவுகள் அறிவிப்பதற்காக ஆயத்தங்கள் நடைபெறுவதாகவும் எனக்கு அறிவித்ததைத் தொடர்ந்து அறிவிப்பை செவிமடுப்பதற்காக நான் அங்கே சென்றேன்.

2015 பொது தேர்தலின் போதும் எமது கட்சியில் வெற்றிபெற்றவர்கள் அந்த இடத்திலே அமர்ந்திருந்த போது தான் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. அதே நடைமுறையை பின்பற்றி அதே அறைக்குள் சென்று, பிரதம தெரிவத்தாட்சி உத்தியோகஸ்தரின் மேசையிலிருந்து சற்றுத்தள்ளி அடுக்கிவைக்கப்பட்ட கதிரைகளில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அறிவிப்பு முகவரின் அருகில் அமர்ந்திருந்து அவருடன் உரையாடிக்கொண்டு, அறிவிப்புக்காகக் காத்திருந்தேன். பிரதம் தெரிவத்தாட்சி உத்தியோகஸ்தரோடு நான் ஒரு வார்த்தை கூட பேசவில்லை .

### சசிகலா ரவிராஜ் வந்தார்

அப்போது திருமதி. சசிகலா ரவிராஜ் அவர்களும் அந்த அறைக்குள் வந்து பிரதம தெரிவத்தாட்சி உத்தியோகஸ்தரோடு பேசினார். அறிவிப்பு ஏன் இன்னும் தாமதமாகின்றது என்று கடும் தொனியில் வினவினார். இன்னும் சில வினாடிகளில் அறிவிப்பு செய்யப்படும் என்று பிரதம தெரிவத்தாட்சி உத்தியோகஸ்தர் சொன்ன போது எத்தனை தடவைகள் நான் உங்களிடம் வந்து கேட்டுவிட்டேன், இதே பதிலை சொல்கின்றீர்கள், நான் இங்கிருந்து போகிறேன் என்று ஆவேசமாக கூறி வெளியே சென்றார். அதை கேட்ட போதுதான் அவரும் அந்த அறைக்குள்ளே பல தடவைகள் வந்து பிரதம தெரிவத்தாட்சி உத்தியோகஸ்தரோடு பேசியிருக்கிறார் என்று எனக்கு தெரிய வந்தது.

நான் அந்த அறைக்குள் நுழைகையில் வெளியே பெரும் கூச்சல், குழப்பம் ஏற்படுவதை அவதானித்தேன். பலர் வாசலை மீறி உள்ளே புகுவதற்கு எத்தனித்தார்கள். அப்படி அவர்கள் புகுந்து குழப்பம் விளைவித்திருந்தால் தேர்தல் முடிவுகள் பற்றிய ஆவணங்கள் சேதப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் அப்படியான அசம்பாவிதம் நடைபெறாமல் தடுத்து பொலிஸ் கலகம் அடக்கும் படையினரும் வெளியே தேர்தல் கடமையில் நின்ற பொலிஸ் அதிரடி படையினரும் அந்தக் கும்பலை விரட்டி அடித்தார்கள்.

முடிவுகள் அறிவிக்கப்படுவது மேலும் தாமதமான காரணத்தினால் நான் அங்கிருந்து வெளியேறி வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

### தகாத வார்த்தைகளால் திட்டித் தீர்த்தனர்

நான் சென்ற பின்னர் எமது கட்சியை சேர்ந்த க.குணாளனும், க.நாவலனும் வேறு பல இளைஞர்களுடன் இணைந்து திரு.ஸ்ரீதரனையும் திரு.சி.வீ.கே.சிவஞானம் அவர்களையும் தகாத வார்த்தைகளால் திட்டியிருந்ததை நான் அறிந்தேன். எமது கட்சியில் முதலாமிடத்தை பெற்றவரை தோளில் தூக்கி வைத்து கொண்டாடியிருக்க வேண்டிய இளைஞர் அணியினர் பகிரங்கமாக அவரை தூஷித்தமை எமது கட்சியிருக்கும் நிலையை வெளிப்படுத்துகிறது. கட்சி உறுப்பினர்களே எமக்கெதிராக செய்த பிரச்சாரத்தையும் முறையடித்து திரு. ஸ்ரீதரனும் நானும் வென்றிருக்காவிட்டால் யாழ் தேர்தல் மாவட்டத்தில் எமது கட்சி ஓர் ஆசனத்தை மட்டும் தான் பெற்றிருக்கும். வெற்றிபெற்று கட்சியின் மானத்தைக் காப்பாற்றிய எமக்கெதிராக இன்றைக்கும் கட்சிக்குள்ளே சூழ்ச்சிகள் செய்யப்படுத்துவது கட்சியை மேலும் பலவீனப்படுத்தும் செயலாகும்.

### பாரிய பின்னடைவிற்கான முக்கிய காரணம்

வாக்குகள் முழுமையாக எண்ணப்படாத தருணத்தில் தமக்கு கிடைத்தாக சொல்லப்படும் உத்தியோகபூர்வமற்ற தகவல்களை வைத்துக்கொண்டு எமது கட்சி வேட்பாளர்களே விருப்பு வாக்கு எண்ணுதலில் மோசடி நடைபெற்றிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடுவது துரதிஷ்டவசமானது. இதற்கு முன்னர் நடைபெற்ற இரண்டு தேர்தல்களிலும் சில நூறு வாக்குகளால் தோல்வியடைந்த திரு. அருந்தவபாலன் இப்படியான சந்தேகத்தை வெளியிட்டிருந்ததும், 2015 தேர்தலில் தன்னுடைய வாக்குகளை திரு.சரவணபவன் களவாடிவிட்டார் எனக் குற்றஞ்சாட்டியிருந்ததும் பலருக்கு நினைவிருக்கலாம். இந்தத் தடவை மூன்றாம் இடத்திலிருந்து தெரிவாகியிருந்த திரு. சித்தார்த்தனுக்கும் நாலாமிடத்திற்கு தள்ளப்பட்டதால் தோல்வியடைந்த திருமதி. ரவிராஜிற்கும் கிடைத்த வாக்குகளின் வித்தியாசம் 700 மட்டுமே. திருமதி. ரவிராஜை விட எனக்கு 4700 வாக்குகள் அதிகமாக கிடைத்திருக்கின்றன. அப்படியிருக்க என்னுடைய தீர்க்கமான வெற்றியை கேள்விக்குட்படுத்தும் சூழ்ச்சியின் ஒரு பகுதியாக திரு. சித்தார்தனும், திருமதி ரவிராஜும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டாது, அவர்கள் இருவரையும் விட 4000 இற்கு மேற்பட்ட வாக்குகளை பெற்ற எனது வெற்றியில் சந்தேகத்தை ஏற்படுத்திடுவதற்கான நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டிருக்கிறார்கள். என்னை தோற்கடிப்பதற்கானதும் வெற்றிபெற்றாலும் அந்த வெற்றியில் சந்தேகத்தை ஏற்றப்படுத்துவதற்கான நிகழ்ச்சி நிரலில் எமது வேட்பாளர்களும் இணங்கி செயற்பட்டதும் எமது கட்சியின் பாரிய பின்னடைவிற்கான முக்கிய காரணமாகும்.

இந்தக் கும்பலில் ஸ்ரீ சு.கட்சி பிரதேசசபை உறுப்பினர்கள், ஆதரவாளர்களோடு எமது கட்சியைச் சேர்ந்த இளைஞர்களும் இருந்ததை பின்னர் காணொலியில் அவதானித்தேன்.

### கட்சியிலிருந்து எண்மரை உடனடியாக நீக்குங்கள்

இப்படியான பாரிய பின்னடைவை கட்சி சந்திப்பதற்கு காரணமாக இருந்த கீழ் வரும் நபர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட வேண்டும்:-

1. ஈ. சரவணபவன்
2. கே. வி.தவராசா
3. கருணாகரன் குணாளன்
4. கருணாகரன் நாவலன்
5. செல்வராசா பிரதாப்
6. பீட்டர் இளஞ்செழியன்
7. விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன்
8. மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன்

மேற்சொன்னவர்களுக்கு எதிராக ஏற்கனவே உள்ள சாட்சியங்களின் அடிப்படையில் மேலதிக விசாரணையின்றி கட்சியிலிருந்து நீக்கப்படலாம். விசாரணை ஒன்று நடைபெற்றால் வேறும் பலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும்.

இது தொடர்பில் உடனடியாக சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கட்டாவிடின் கட்சி மேலும் பின்னடைவை சந்திக்கும் என்பதை மனதில் கொண்டு துரித நடவடிக்கை எடுப்பது அவசியம் என்பதை வலியுறுத்தி நிறைவு செய்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள
ம.சுமந்திரன் பா.உ.

பிரதிகள்:-

1. கௌரவ. இரா. சம்பந்தன், தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
2. திரு.மாவை சேனாதிராஜா, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
3. மத்திய செயற்குழு உறுப்பினர்கள்

# 20 ஆவது திருத்தச் சட்ட மூலம்: எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு!

## சஜித் தரப்பு தாக்கல்செய்ய உள்ளது

கொழும்பு, செப். 05

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட மூல வரைவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்கு செல்லவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

நேற்று(வெள்ளிக்கிழமை) கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

19 ஆவது திருத்த சட்டமூலம் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டபோது அமைச்சர் தினேஷ் குணவர்தன ஒவ்வொரு சரத்திற்கும் திருத்தங்களை முன்வைத்தார்.

அதேபோன்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகியோரும் அவரைப் போன்றே திருத்தங்களை முன்வைத்தனர்.

ஆனால் இன்று, 20 ஆம் திருத்த சட்டத் திற்கு சென்று சகல அதிகாரங்களையும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

இந்த 20 ஆம் திருத்த சட்டத்தின் ஊடாக உயர் நீதிமன்றத்திற்கான நியமனம், பொலிஸ், முப்படைகளுக்கான உயர் பதவி நியமனம், கையூட்டலுக்கு எதிரான ஆணைக்குழுவுக்கான நியமனம் ஆகியவற்றை ஜனாதிபதியின் தனி தீர்மானங்களுக்கு அமைய மேற்கொள்ளமுடியும். ஆகவே 20 ஆம் திருத்த சட்டத்தில் சில முக்கிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இதனால், இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உயர்நீதிமன்றத்துக்குச் செல்ல தீர்மானித்துள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பஸில் ராஜபக்ஷவை நாடாளுமன் றத்துக்கொண்டு செல்வதே 20 ஆவது திருத்தத்தின் நோக்கம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துசார அமரசேன குற்றம் சுமத்தியுள்ளார். மேலும், இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்களுக்கு எதிரானவன் அல்லன். ஆனால் ஏனைய நாடுகளின் பிர ஜாவுரிமையைப் பெற்றவர்கள் இலங் கையின் சார்பில் சிறந்தமுடிவுகளை எடுப்பார்கள் என மக்கள் ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராயும் ஆணைக்குழுவில் ரணில்

கொழும்பு, செப். 04

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க அரசியல் பழி வாங்கல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு விசாரணைக்காக அழைக்கப் பட்டுள்ளார்.

பொருளாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் நிகால் ஜயதிலக்க, ஆணைக்குழுவில் மேற்கொண் டுள்ள முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டே ரணில் விக்கிரமசிங்க அங்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதன்படி நேற்று முற்பகல் ரணில் விக்கிரமசிங்க அந்த ஆணைக்குழுவில் ஆஜராகியுள்ளார்.

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஆராயும் ஆணைக்குழு ஹக்கீமிடம் விசாரணை

இலங்கையில் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதியன்று நடைபெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் பொலிஸ் பிரிவுக்கு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அழைக்கப்பட்டுள்ளார்.

வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்காக கொழும்பிலுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குவருமாறுஅவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய நேற்று முற்பகல் அவர் அந்த ஆணைக்குழுவுக்குச் சென்றுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir


# Techno World
## தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

## A/L 2020 தொழில்நுட்ப பிரிவு

## மாபெரும் விசேட செயலமர்வு

காலை 8 - மதியம் 2.30 | 07.09.2020 முதல்

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 7-9,12-15, 25-27 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 10-14,26-27 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 18-21 | I.C.T, விவசாய விஞ்ஞானம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம்(7),சித்திரம் |

## ஆரம்பம் 07.09.2020 (8am - 2.30pm)

- ✔ தொழினுட்பப்பிரிவின் அனைத்து மாணவர்களும் பங்கு பற்றலாம்.
- ✔ இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
- ✔ எதிர்பார்க்கை பாடப்பரப்புக்களின் விடயங்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும்.
- ✔ கடந்த மூன்று வருடமாக தேசிய நிலையிலும்.மாவட்ட நிலையிலும் பல சாதனை மாணவர்களை உருவாக்கிய Techno worldஇன் ஆசிரியர்களால் நடாத்தப்படும்.
- ✔ கையேடுகளை சிரமமின்றி பெற்றுக்கொள்ள முற்பதிவுகளை மேற்கொள்ளவும்
- ✔ வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு : 0770175346, 0771703549


# சொன்னதைச் செயலில் காட்டுவதுதான் 'மொட்டு'

## புதிய அரசமைப்பும் வரும் என்கிறார் மஹிந்தர்



அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஒக்டோபர் மாதத்துக்குள் நிறைவேற்றியே தீருவோம். அதன்பின்னர் புதிய அரசமைப்பின் சட்ட வரைவையும் தயாரிப்போம். அதையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றியே தீருவோம்.

- இவ்வாறு உறுதிபடத் தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு சொன்னதையே செயலில் காட்டும். ஜனாதிபதித் தேர்தல் காலத்தின்போதும், பொதுத்தேர்தல் காலத்தின்போதும் நாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றியே தீருவோம். எதிர்க்கட்சிகள் கூறுவது போன்று நாம் போலி வாக்குறுதிகள்எதனையும்வழங்கவில்லை.

நல்லாட்சி அரசால் நிறைவேற்றப்பட்டிருந்த அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம்நாட்டுக்குச்சாபக்கேடாக இருந்தது. அதனால்தான் அதைத் திருத்தியமைத்து 20ஆவது திருத்தச் சட்ட வரைவைத் தயாரித்துள்ளோம். இது நிறைவேறிய பின்னர் புதிய அரசமைப்புக்கான சட்ட வரைவையும் தயாரிக்கவுள்ளோம்.

நாடும் அரசும் மக்களும் ஓரணியில் இயங்க வேண்டுமென்றால் ஒழுங்கான - நேரான அரசமைப்பு இருக்க வேண்டும் - என்றார்.

# வாக்காளர்கள் இடாப்பு மறுசீரமைப்பு நடவடிக்கை

கொழும்பு, செப். 05

வாக்காளர் இடாப்பு மறுசீரமைப்பு படிவங்களை வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்த மாதம் இறுதி வரை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளை விரிவாக முன்னெடுக்குமாறு கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக வாக்காளர் இடாப்பு மறுசீரமைப்பு படிவங்களை வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# துயர் பகிர்கின்றோம்



# பொன்னையா இராசநாயகம்

**(முன்னாள் மக்கள் வங்கி சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்)**

நாவற்குழி கிழக்கு தச்சந்தோப்பை பிறப்பிடமாகவும், 15/11C முதலாம் ஒழுங்கை கண்டி வீதி அரியாலை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசநாயகம் (03.09.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்ற பொன்னையா மாணிக்கத்தின் அன்பு மகனும், காலம் சென்ற பரிபூரணம் - தங்கமலரின் மருமகனும் பாபறா லீலாவதி (லலிதா)யின் பாசமிகு கணவரும் காலம் சென்ற றெமிசியஸ் தம்பிநாயகத்தின் அன்புச் சகோதரனும் யசோதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்- பிரதேச செயலகம், வேலனை), ரமணன் (UK - முன்னாள் பொதுச் சுகாதார பரிசோதகர்), குமணன் (முகாமையாளர், சம்பத் வங்கி யாழ்ப்பாணம்), யாழினி (பிரான்ஸ்), சுமணன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), ஜனனி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), கோபினி (UK), துளசினி (ஆசிரியை, ஈச்சிள வைக்கை அ.த.க. பாடசாலை மன்னார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரமணன் (ஆசிரியர், சென்.பற்றிக் கல்லூரி), சியாமளா(UK), தமயந்தி (செலான் வங்கி, சுன்னாகம்), துஸாந்தன் (பிரான்ஸ்), மதுமிதா, இலங்கன் (பனை அபிவிருத்தி சபை, யாழ்ப்பாணம்), அமிர்த கிரணன் (UK), விருஷன் (ஹற்றன் நஷனல் வங்கி) ஆகியோரின் மாமனாரும் நகுல், கனிஷியா, பிரஜித், கேஷானி, நவீன், கிளேயர், ரஸ்மிதா, தனுஸ்கா, ஹனிஸ்கா, ஆஷிகன், ஆஹர்ஷன், சர்ஜின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.09.2020 நாளை ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகன கிரியைக்காக நாவற்குழியில் உள்ள பிண முருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு -
077 314 4578
077 248 7201
077 474 5241

தகவல் - குடும்பத்தினர்
15/11C, முதலாம் ஒழுங்கை
கண்டி வீதி, அரியாலை
யாழ்ப்பாணம்.


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.09.2020 இல் வெளியிடப்பெற்றது.